



# 50 வது சிறப்பிதழ்

மின்சாரத் துறை என்ன கோளாறு?

அண்ணா! என்கிற மனிதர்

64 பக்கங்கள்


# சுட்டி

ஏப்ரல்'85
ரூ.1/-
மாத இதழ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,

# பதவி நாற்காலி






FREE E- BOOKS , www.thamizham.net.,

# நண்பர்களே!

ஆம்! 50 இதழ்களைக் காலந்தவறாமல், ஓரிதழும் நிற்காமல் சுட்டி வெளிக் கொணர்ந்துவிட்டதில் பெருமூச்சு விடுகிறது. இந்நூற்றாண்டு முற்போக்குப் பத்திரிகை வரலாற்றில் சுட்டிக்குத் தவிர்க்க முடியாத இடம் கடந்த கால இதழ்கள் ஏற்படுத்தியிருக்கும் என்ற நிறைவே நாம் இதுவரை அனுபவித்த துன்பங்களை இதமாக்குகிறது.

கடந்த மாதங்களில் உங்களுக்கு எழுதிய கடிதங்களின் உணர்வை சுட்டி முடிந்தவரைப் போற்றி பாதுகாத்து செயல் படுத்தி வந்திருக்கிறது. சுட்டி சற்று சறுக்கி விழ, தவறுகள் செய்ய நேர்ந்தால் சமாதானம் சொல்வதை விட, தன்னைத் திருத்திக் கொள்ளவே விரும்புகிறது. எங்கள் எழுதுகோல் விழும்போது உங்கள் விமர்சன ஊன்றுகோல் எங்களை மீண்டும் எழச் செய்யட்டும். வாசகர் எதிரொலியும், சுயவிமர்சனமும் சுட்டியின் நுரையீரல்கள்!

“சுட்டி” இதழ் கடந்த 50 மாதங்களில் சாதித்தவற்றைப் பக்கத்தில் தந்திருக்கிறோம். இதில் மட்டுமே நாம் நிறைவடைந்துவிடவில்லை. சுட்டி தனது எழுத்துக்கூட்டை உடைத்துக் கொண்டு சமுதாய வெளியில் உயரமாக பறக்கும்போதே இன்னும் அதிகம் பயன்பட முடியும். இதற்காக சுட்டி எடுத்து வைக்கும். அடுத்த பாய்ச்சல்: சுட்டி அறம் என்ற மக்கள் டிரஸ்ட் அமைப்பு. இதன் முழுவிவரம் வேறு பக்கத்தில் காண்க.

பார்முலா மாயையை உடைத்தெறிந்து ஆப்செட் அச்சமைப்பில் கூட ஒரு சிறு பத்திரிகை மக்கள் பத்திரிகையாக, கவர்ச்சி மசாலாக்கள் இன்றி நடத்த முடியுமா என்று இன்னுங்கூட கேள்வி கேட்போர்க்கு, வாமன வடிவத்தில் தோன்றி 50 வது இதழாக விஸ்வரூபம் எடுத்திருக்கும் இந்த இதழ் முற்றுப்புள்ளி வைக்கட்டும். தெளிவான திட்டமும், நேரிய உழைப்பும் இருப்பின், அதிகார பணபலமின்றி முற்போக்கு இதழ்களை யாரும் நடைமுறைப் படுத்தலாம் என்பதே நாம் நிரூபிக்கும் பாடம்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இந்த முயற்சி, ஆயிரக்கணக்கான விழிப்புள்ள வாசகர்களின் இடைவிடா ஆதரவின்றி சாத்தியமில்லை. கடந்த காலங்களில் சுட்டியோடு கைகோர்த்து வந்த வாசக நண்பர்களை, வித்தியாசமான இந்த பத்திரிகையைக் கடும் எதிர்ப்புக்கிடையே மிக முயன்று பரப்பிய விற்பனையாளர்களை சுட்டியைக் கூர்படுத்திய எழுத்தாளர்களை, பிற அனைத்து ஆதரவாளர்களையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம்.

இதற்கு சுட்டி செலுத்தும் நன்றிக்கடன், சுட்டி மேலும் படு சுட்டியாகவே தொடரும் என்ற உறுதிமொழியை மேலும் அர்ப்பணிப்புடன் செயல்படுத்துவது தான்.

பிற உங்களிடமிருந்து.

அன்புடன்
ஆசிரியர் குழு

## கடந்து வந்த சுமார் 4 ஆண்டுகளில் சுட்டி துணை போன முக்கிய செயல்கள்

★ கையெழுத்துப் பத்திரிகைகள் பம்மலில் ஒன்று கூடி மாநாடு நடத்த தோள் கொடுத்தது.

★ சுட்டி வாசகர்களில் வாடகை வீடுகளில் குடியிருப்போர் பிரச்சனைக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கியது.

★ குமுதம் தொழிலாளர் போராட்டத்தில், அவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரித்து உச்ச நீதி மன்றம் வரை வழக்கறிஞர்களை நியமிக்க முன்வந்தது.

★ கோவை அவினாசிலிங்கம் மகளிர் கல்லூரி, அம்பேத்கார் கல்லூரி, எஸ்ஐஇடி கல்லூரி, த.பெ. ஜெயின் கல்லூரி இங்கெல்லாம் நிர்வாகம் செய்த அநீதிகளை வெளிச்சத்திற்குக் கொணர்ந்து, ஆசிரியர் போராட்டங்களுக்கு துணை நின்றது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

★ பராமரிப்புத் தொகை பெற வாசகர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கியது.

★ வெளியே வராத முரசொலி தொழிலாளர் பிரச்சனை, அண்ணா அறக்கட்டளையின் அநியாயம் இவற்றைத் துணிந்து எழுதி பலருக்கு நன்மை விளையச் செய்தது.

★ வாசகர் குமுறல் பகுதியில் வெளியிட்ட குமுறல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி ஏராளமான தனி, பொது பிரச்சனைகள் தீர வழி கோலியது.

★ கிராமத்துப் பிரச்சனைகள் பற்றி தொடர்ந்து எழுதி, பல கிராமங்களில் நிகழ்ந்த சீர்கேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க காரணமானது.

★ புகைப்பிடிப்பதை எதிர்த்து சுட்டி எழுப்பிய இடைவிடா முழக்கம், ஆசனங்கள், உடற்பயிற்சிகள், நமது இயற்கை மருத்துவம் பற்றிய கட்டுரைகள் ஆயிரக்கணக்கானவர்களின் உடல் நலிவு நீங்கி எழுச்சி பெற காரணமாகியது.

★ திருமணத்தை வீண் ஆடம்பரத்துடன் செலவிடும் மூடப் பழக்கத்திற்கு சாவு மணி அடித்து 'திருமண அறிவிப்பு' மட்டும் வெளியிடும்படி சுட்டி வேண்டுகோள் விடுத்ததுடன், இவ்வாறு மணம்புரிவோர்க்கு ஆயுள் முழுவதும் சுட்டி இலவசமாகவும் அனுப்புவதாகவும் ஊக்குவித்தது. சுமார் 10க்கு மேற்பட்ட திருமணங்கள் இப்படி திருமண அறிவிப்பு மட்டும் வெளியிட்டு நடத்த சுட்டி காரணமானது.

★ நசிவு இலக்கியங்களை பரப்பி மக்களை மந்தப்படுத்தும் மசாலா வணிக ஏடுகளைப் பற்றி சுட்டி வெளியிட்ட கூர்மையான கட்டுரைகள் வாசகர் மத்தியில் கணிசமான விழிப்பை ஏற்படுத்தியதை நாடறியும்.

★ முற்போக்கு இதழ்கள் ஒன்று கூடி இணைந்து செயல்படும் கூட்டமைப்பு ஏற்படுத்தும் முயற்சிக்கு சுட்டி ஆதரவுக் கரம் நல்கியது. விவாதித்தது. தொடர்ந்து இம்முயற்சியைச் செயல்படுத்த பாடுபடும்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

கட்டி சிறுகதைப் போட்டியில் கலந்து கொண்ட அத்தனை எழுத்தாளர்களுக்கும் நன்றி. மொத்தம் 102 சிறுகதைகள் வந்தன. இதில் தேர்ந்தெடுக்கப்படும் சிறுகதைகள் அனைத்தையும் அடுத்தடுத்து கட்டி இதழ்களில் வெளியிடப் படும் ஒவ்வொன்றிற்கும் ரூ.15/— சன்மானம் அளிக்கப் படுகிறது. — ஆசிரியர் குழு

---

"இன்னாடா இது அச்சமா கீது... ஏன்டா வடிவேலு... இன்வா நீ குந்திக்கினு கிரே... வர்லை எலிக்ஷன் வேலைக்கு..."

நீ முதல்லே போ பொன்ரங்கம்... அப்பாலே வரேன்..."

"என்னடா? நீ இல்லாம எதுடா நடக்கும்! வா கண்ணு... நம்ம ஆளு சொம்மா 'மீடிங்'லே பிச்சி உதறிக் கினு வர்னும்... அந்த ராஸ் கோலுக்கு 'டப்பாசிட்டு' கவுர் ரனும்..."

"அல்லாம் சரி... பொன்ரங்கம்! வூட்லே ஆத்தாளுக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கிக்கினு கீது..."

"அட இன்னாடா இவன்... நாம போயி தலைவரு கையிலே சொல் வோம்... அவர் பாத்துக்குவாரு... ரெண்டு டாக்டருங்க கீராங்களே கூடவே..."

"கையிலே பைசா இல்லே... முன்னாலேயே பாத்துருந்தா, அதுக்கு இம்மாந் தொலைவு வந்திருக்காது பொன்ரங்கம்!"

"நீ சொம்மாவே ஒக்காந்துக்கினு இன்னா பண்ணப் போறே... தலைவராவது டாக்டரை அனுப்பு வாரு... வாடா..."

"பொன்ரங்கம் சொல்வதிலும் உண்மை இருக்கிறது" என்று வடிவேலு உள்ளம் மெல்ல சொல் லிற்று.

வடிவேல் குடிசையை விட்டு வெளியே வந்தான்.

தலைவர் கட்சி ஆபீஸில் இருந் தார்.

"அண்ணே! வடிவேலு ஆத் தாளுக்குக் காய்லா அண்ணே... உன் கையிலே டாக்டருங்க கீறாங்க இல்லே... அனுப்பினியானா, இவன் 'கேன்வாஸிங்'குப் போயிடுவான்!"

## பரிசுக்கதை
# கனவு மயக்கங்கள்

"நான் அனுப்பி வைக்கிறேன் ஆனா.. நீ கிளம்புப்பா! வடிவேலு நம்ம கட்சிக்கே ஒரு பொக்கிஷம் மாதிரியாச்சே... இது நான் செய்ய மாட்டேனா? கிளம்புங்க"

வடிவேலு, பொன்ரங்கம் கிளம்பிப் போனார்கள்.

"எலெக்ஷன் முதல்லே முடி யட்டும்... இந்தத் தரித்திரங்களைச் செருப்பாலே அடிச்சி வெளியே நிக்க வெக்கணும்! இவன் ஆத்தாளுக்கு வைத்தியம் பாக்க என் டாக்டரு கேக்குதா? திமிர் பிடிச்ச நாய்ங்க..."

மனசுக்குள் நினைத்தவாறு, வேறு வேலை பார்க்கக் கிளம்பலா னார். — அரசு மணிமேகலை

FREE E- BOOKS , www.thamizham.net.,

எண்ணத்தை இனிதாக்கும்
வண்ணப்புகைப்படங்களுக்கும்
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
உன்னதக் கறுப்பு வெள்ளைப் படங்களுக்கும் அணுகுங்கள்

பாலாஜி போட்டோ சர்வீஸ்

2, சிவஞானம் சாலை, தியாகராயர் நகர் தலைமை தபால் நிலையம் எதிரில்
சென்னை — 600 017. தொலைபேசி எண்கள்: 440154, 441121

'குறித்த நேரத்தில் படங்களைத் தருவதே
எங்களில் நிலைத்த குறிக்கோள்'

நல்லதைக் கட்டட்டும்
அல்லதைச் சுட்டட்டும்
அயர்ந்தோரைத் தட்டட்டும்



குட்டி பத்திரிகை 'சுட்டி'
வாழ்க! மேலும் வளர்க!!

அன்புடன்

ராஜேந்திரகுமார்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# வறுமையால் சூடான் சுடுகாடாகிறது.



வறுமை சூடானிய மக்களை அமைதியாக கொன்று குவிக்கிறது.

அண்டை நாடான எதியோப்பியாவுக்கு இருக்கும் பிரபலம் சூடானுக்கு கிடைக்கவில்லை.

என்றாலும் சூடானில் ஏற்பட்டுள்ள பஞ்சம் எதியோப்பியாவுக்கு எந்த வகையிலும் சளைத்தது அல்ல.

தொலைக்காட்சியின் கண்ணில் படாமல், செய்தியாளர்களிடம் சொல்லிக் கொள்ளாமல் சூடான் மக்கள் பட்டினியால் சாகிறார்கள்.

நீல நைல் நதிக் கரைகளில் அவதியுறும் மக்களின் துன்பத்தில் பங்கு கேட்டு சுமார் 10 லட்சம் அகதிகள் வேறு வந்து அடைக்கலம் கேட்டு நிற்கிறார்கள்.

சூடானில் 56 லட்சம் மக்களுக்கும், அகதிகளில் ஒன்றரை லட்சம் பேருக்கும் உணவு இல்லை.

சூடானுக்கு உதவிகள் வழங்குவதில் ஐ.நா தனித்தே நிற்கிறது.

ஏனோ எதியோப்பியாவுக்கு போட்டி போட்டுக் கொண்டு உதவும் பணக்கார நாடுகள்

FREE E- BOOKS , www.thamizham.net.,

சூடானை விட்டுவிட்டன.

உணவு பற்றாக்குறையினால் சூடான் எல்லைப் பகுதியில் உள்ள முகாம் ஒன்றில் தினசரி 85 பேர் உயிர் இழக்கின்றனர். இவர்களில் அநேகர் குழந்தைகள். சூடான் சுடுகாடாகிக் கொண்டிருக்கிறது.

இதுதான் சூடான் நாட்டின் நிலைமை. இந்த நிலையிலிருந்து சூடான் மீண்டு விடுமா?

அதற்கான அறிகுறிகள் ஏதுமில்லை.

மாறாக இன்னும் மோசமான நிலைக்கு தள்ளப்படும் சாத்தியமே மேலோங்கி தெரிகிறது.

சூடானின் முதல் பிரச்னை தண்ணீர் தட்டுப்பாடு.

இது ஆப்பிரிக்க நாடுகளின் பொதுப்பிரச்னை.

போதாக் குறைக்கு பிப்ரவரியில் இருந்து மே மாதம் வரை சூடானில் கோடைகாலம்.

அகதிகள் இரண்டாவது பிரச்னை. கடந்த ஜனவரி மாதம் திவிரவாதிகளை ஒடுக்கும் எதியோப்பிய ராணுவத்திற்கு பயந்து நாளொன்றுக்கு 8,000 பேர் என்ற விகிதத்தில் ஏழை எளியவர்கள் சூடானுக்குள் ஓடி வந்தார்கள்.

ஓடி வருபவர்களை திருப்பிஅனுப்ப அரசியல் நிலைமைகள். இடம் கொடுக்கவில்லை.

எனவே இந்த அகதிகள் வந்த நாடே அவர்களின் சொந்த நாடாகி விட்டது.

எதியோப்பியாவும் சூடானும் அரசியல் எதிரிகள்.

உடன்பாடு, ஒப்பந்தம் என்பதெல்லாம் இப்போது சாத்தியமில்லை.

உள்நாட்டு மக்களுக்கே சோறு போட வழி இல்லாத போது அகதிகள் வேறு?

அனுசரிப்பதை விட்டால் மாற்று வழிகிடையாது என்பதால் சூடான் வாய் மூடிக் கிடக்கிறது.

ஏழை மக்கள் சாவதை பார்த்து கைகட்டி நிற்பது ஆப்பிரிக்க நாடுகளில்அன்றாடகொடுமை

கட்டி சந்தா: 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

என்னைத் தொடர்புகொள்ளும்: "கட்டி", 1954, அண்ணாநகர், சென்னை 600 040

கட்டி முன் இதழ்கள் எண்: 1 முதல் 17, 19, 21, 22, 26, 30 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும்.

இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

கட்டி இணைசம்: கட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர் ஒருவரின் முகவரியை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

கட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில கட்டி இதழ்கள் அஞ்சலில் திருப்பப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடியும் காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் கட்டி கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

ரூ.10/—க்கு 5 நூல்கள் (அஞ்சல் செலவு உள்பட) டி.ஜி.எஸ். தினகரன் ஒரு பகல் கொள்ளைக்காரர் — மெர்வின் (1.00) ஊடலில் பெண்கள் (1.70) சித்திரலேகா (2.00) அறந்தரு சிந்தையோன் (2.50) உலகம் பலவிதம் (2.50) பாலன் சகோதரர்கள். புழல் (அஞ்), சென்னை — 600 066.

விரைவில் வருகிறது!

மகரந்தம் மாத இதழ்

விபரங்களுக்கு: S.A. சுகுமாரன்

39-A, திரவியபுரம் 5 ஆம் தெரு,

தூத்துக்குடி - 628 002.

விற்பனையாகிறது

குருவிக்கரம்பை சண்முகத்தின்

"கவிதை அரங்கேறும் நேரம்" (புதுக் கவிதைத் தொகுப்பு)

விலை ரூபாய் 7—00

எம்.ஓ. அனுப்ப வேண்டிய முகவரி

பாண்டியன் பதிப்பகம், 17 மூன்றாவது குறுக்குத் தெரு கிழக்கு, செனாய் நகர், சென்னை — 600 030.

# மணிவாசகர் பதிப்பகத்தின்
## சிறப்பு வெளியீடுகள்

| | |
|---|---|
| புதுமைப்பித்தன் — முல்லை முத்தையா | 5.00 |
| கம்பர் — வ.சு.ப. மாணிக்கம் | 5.00 |
| நூறு பூக்கள் (புதுக் கவிதைகள்) — ஆ. செகந்நாதன். எம்.ஏ. | 10.00 |
| தாகூர் — ச. மெய்யப்பன் எம்.ஏ. | 10.00 |
| உலகம் போற்றும் இந்திரா — ச. மெய்யப்பன் எம்.ஏ | 12.00 |
| நடையியல் — டாக்டர். ஜெ. நீதிவாணன் | 13.50 |
| வேள்வித்தீ — எம்.வி. வெங்கட்ராம் | 13.25 |
| கவி பாடலாம் — கி.வா. ஜகந்நாதன் | 15.00 |
| உலக மொழிகள் — டாக்டர். ச. அகத்திய லிங்கம் | 30.00 |
| புதிய நோக்கில் படைப்பிலக்கியம் — த. ராசு | 31.00 |

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

மணிவாசகர் நூலகம்

புத்தகம் வெளியிடுவோர்,

89, லிங்கிச் செட்டித் தெரு,

சென்னை — 600 001.

போன் — 512996

FREE E- BOOKS , www.thamizham.net.,

# கவிஞர் இன்குலாபும் சோழன் ராஜராஜனும்

முற்போக்குக் கவிஞர் இன்குலாப் அவர்களின் கவிதைத் தொகுப்பு சென்னைப் பல்கலைக்கழகத்தின் எம்.ஏ. மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது வரவேற்புக்குரியது ஆனால் பிற்போக்குவாதிகள் மத்தியில் இக்கவிதைகள் மகா எரிச்சலைக் கிளப்பி விட்டிருக்கிறது. ராஜ ராஜ சோழரைப் பற்றி சமீபத்தில் மிகவும் விவாதிக்கப்பட்ட இன்குலாபின் கவிதை இது:



"ராஜராஜன் சிலைக்காக வருந்துகிறார்
சிலையாகு முன்னர் ஜீவித்திருந்த இம்மன்னன்
என்னத்தைச் செய்து கிழித்து விட்டானாம்!
ஈழம் கொண்டானாம் சாவகம் வென்றானாம்
காலனி ஆதிக்கத் தொழு நோய்த் தேமலை
பூமியின் முகத்தில் எழுதிய புல்லனுக்கு
மக்களாட்சியா மகத்துவம் சேர்க்கும்?
பிரகதீஸ்வர் ஆலயத்துக்காக குடும்ப விளக்கின்
கொழுந்துகளை எல்லாம் மண்ணில் தோய்த்த
மாபாதகன் இவன்.
தஞ்சை நகரில் தேவடியாள் தெருக்களுக்காக
கால் கோள் விழாச் செய்த காமுகன் இம்மன்னன்
மக்களாட்சியின் மகத்துவத்தைச் சிலையான
பின்னரும் கற்பழிக்கின்றான்"



இக்கவிதை பாடநூலில் இடம் பெற்றது பற்றி மேலவையில் கவிஞர் முத்துலிங்கம் என்பவர் தரக்குறைவாக பேசியது மன்ற முரசு 20.8.'85 நாளிதழில் வெளி வந்திருக்கிறது: "1000 ஆண்டுகளுக்கு முன்பே மக்களாட்சித் தத்துவத்தை இந்த மண்ணிலே தூவியவன் ராஜ ராஜன். அவனைப் பாதகன் என்றும் காமுகன் என்றும் எழுதியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கவிதையை இன்குலாப் என்பவன் எழுதிய கவிதையைப் பாடப் புத்தகத்திலே வைத்திருக்கிறார்கள்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இக்கவிதையை யாரேனும் பரிந்துரை செய்து படித்துப் பார்க்காமல் சேர்த்தார்களா? அல்லது இனப் பகைவர்களும், மொழிப் பகைவர்களும் பாட நூல் குழுவிலே ஊடுருவி இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்''

சரியான வரலாற்றுணர்வு அற்ற இந்த ஆளும் வர்க்க ஜால்ராக்களுக்குத் தமிழ்ப் பேராசிரியான இன்குலாப் தரும் பதில்:

“ராஜ ராஜ சோழன் உயர் ஜாதியினரும், செல்வந்தர்களும் மட்டும் தான் குடவோலை முறையில் ஊராட்சி தலைவர்கள் ஆக முடியும் என்று வரையறுத்தான். ராஜ ராஜன் வளர்த்துப் போற்றிய வர்ணாஸ்ரம முறையைத் தான் பெரியார் வழியில் வந்ததாகக் கூறும் இவர்கள் ஜனநாயகம் என்று வெட்கமின்றி பிதற்றுகிறார்கள். அவன் தமிழன் என்பதால் மட்டுமே நான் அவனுக்கு சலாம் போட முடியாது! ராஜ ராஜன் தன் போர்ச் செலவுகளுக்காக விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்து வரி வசூலித்தான். சோழர் ஆட்சியில் ஏற்பட்ட ஏழை விவசாயிகளின் கலவரங்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டதற்கு ஆதாரம் இருக்கிறது. பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்திற்குத் துரோகம் இழைத்தவன் ராஜ ராஜன். அவன் செய்த கொடுமைகளுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் நான் என் கவிதை மூலம் பழி தீர்க்க வந்திருக்கிறேன். என்னை விட அவன் மேல் அதிகமான கோபம், தாழ்த்தப்பட்ட குடியில் தோன்றிய தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அவரும் அதிமுக பேர்வழிகளும், இந்த வர்ணாஸ்ரம வாதியைத் தலை மேல் தூக்கிக் கொண்டு ஆடுவது தான் வியப்பாக இருக்கிறது. பெரியார் என்றாவது ராஜ ராஜனைப் பாராட்டியதாக இவர்களால் சொல்ல முடியுமா? ”

ராஜ ராஜனை இவர்கள் தூக்கி நிறுத்துவதன் பின்னணி என்ன? இந்த ஆளுங்கட்சி அடிவருடிக் கவிஞர், ராஜ விசுவாசத்துடன் கடைசியில் எங்கே வருகிறார் பாருங்கள்;—

“... அதே போல நாளை புரட்சித் தலைவர் அவர்களைப் பிடிக்காத கவிஞன் எழுதுவான், புரட்சித் தலைவரைப்

FREE E- BOOKS , www.thamizham.net.,

பிடிக்காத யாரும் பாடக் குழுவிலே இருந்து அதைச் சேர்க்கலாம். எனவே இக் கவிதையைப் பரிசீலித்து பாடப் புத்தகத்திலிருந்து அந்தப் பகுதியை நீக்குங்கள் அல்லது அந்தப் பாடப் புத்தகத்தைத் தூக்குங்கள் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்."

இதே பல்கலைக் கழகம் பல ஆண்டுகளாக பட்டதாரி வகுப்பு தமிழ்ச் செய்யுள் பகுதியில்:

"இருபுறமும் இருமாதர் இடை யில் அந்த
இளைய மகன். சுவையான கதைத் துவக்கம்"

(கண்ணதாசன்: ஆட்டனத்தி — ஆதிமந்தி)

என்று தொடர்ந்து வரும் இது போன்ற காமந்தர நசிவு இலக்கியங்களைத் திணித்து வருவதெல்லாம் இந்த முத்துலிங்கங்கள், கண்ணில் பட்டாலும், கண்டு கொள்ள மாட்டார்கள்!



— எழில்

Lease/Finance available for equipments, Machineries and Motor Vehicles.

PLEASE APPROACH US FOR BENEFICIAL DEPOSIT SCHEMES

COME CLOSE TO GROW TOGETHER.

APPLICATION FORMS ARE AVAILABLE.

Contact: SANCHETI BUSINESS HOUSE,
581. MOUNT ROAD,
MADRAS - 600 006.

Telephone: 451990
453200

Telegrams: HAPPYLEASE

FREE E- BOOKS , www.thamizham.net.,

# தீப்புண்

## முதலுதவி



தீப்புண் பல்வேறு காரணங்களால் உண்டாகலாம். நேரடியாக நெருப்புப் படுவதால் தோல் பொசுங்கிப் போய்ப் புண் உண்டாகலாம். அல்லது கொதி நீரோ, ஆவியோ, எண்ணெயோ பட்டும் உண்டாகலாம். இவை எல்லாவற்றையும் இங்கே தீப்புண் என்று குறிக்கிறோம்.

பொதுவாக முன்னெச்சரிக்கையாக இருப்பதனால் பாதி அளவு தீ விபத்துக்களைக் குறைத்துவிட முடியும். எத்தனை ஆயிரம் ஆயிரம் பெண்கள் ஸ்டவ் வெடித்துச் சேலை தீப்பற்ற இறந்து போயிருக்கிறார்கள் என்பதை வேதனையோடு இங்கே நினைத்துப் பார்க்கிறோம்.

லாபம் ஒன்றையே கருதி மெல்லிய தகடுகளால் கண்ட கண்டவர்கள் செய்யும் பிரஷர் ஸ்டவ்களை வாங்காமலும் அடுப்பு வேலை செய்யும் போது கட்டாயமாக நைலான் போன்றவற்றை அணியாமலும் கட்டுப்பாடாக பெண்கள் இருந்தால் விபத்துக்களில் பாதி தன்னால் குறைந்துவிடும்.

இந்த முன்னெச்சரிக்கைக்குப் பிறகும் தீப்புண் நேர்ந்தால் செய்யத் தகாதவையும் செய்யத்தக்கவையும்:

1. தீப்பிடித்து விட்டால் ஓடக் கூடாது; தண்ணீரை மேலே வீசக் கூடாது; கீழே கம்பளிகளால் போர்த்தித் தீயை அணைக்க வேண்டும்.

2. தண்ணீரையோ, எண்ணெயையோ, நீலமாக இருக்கிறது என்று பேனாவுக்குப் போடும் இங்கையோ தீப்புண் மேல் போடக்கூடாது. மருத்துவநிலையத்தில் நீலமாகத் தடவுவது ஜென்ஷியன் வயலட் (GENTIAN VIOLET) கலந்த திரவம்.

3. தீப்புண் சாதாரணமாகவும், கொப்புளங்கள் குறைவாகவும் இருந்தால் அவற்றின் மீது தேன், பாலை போன்றவற்றைப் பஞ்சினால் ஒற்றி உடனடியாக மருத்துவரிடம் போய் விட வேண்டும்.

4. காப்பி சாப்பிடாதவர்களுக்கும், குழந்தைகளுக்குமானால் ஹோமியோபதி முறைப்படி காந்தரிஸ் க்யூ 30 (CANTHARIA Q 30) என்ற திரவத்தை பஞ்சினால் எடுத்துத் தடவி அந்த மாத்திரைகளையும் 4 எடுத்து உட்கொள்ளவும்.

5. கொப்புளங்களுக்குக் கட்டுப் போடக்கூடாது. மெல்லிய தூய துணியால் மூடி விட வேண்டும். தீக் கொப்புளங்களை உடைத்துவிடக் கூடாது. உடனடியாக தீயணைக்கும் படை அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு பக்கத்தில் இருக்கும் மருத்துவரிடம் போய் விட வேண்டும்.

6. சாதாரண தீப்புண்ணின் மீது, சமையல் சோடா எனப்படும் பேகிங் சோடாவை (SODIUM BICARBONATE) தண்ணீர் விட்டுக் குழைத்து அதை அப்படியே மெல்லிய துணியில் பூசி, வைத்து அழுத்திக்கட்டாமல் மெல்லிய துணியால் சுற்றி வைக்கவும். (மேலே சொன்னது வாஷிங் சோடா அல்ல) அல்லது ஸல்போனமைட் அல்லது பெனிஸிலின் பவுடரை தீப்புண் மீது தூவலாம். →

FREE E- BOOKS , www.thamizham.net.,

7. பெரியவர்களின் உடலில் 1/3 பங்கு தீப்பட்டிருந்தால் உயிருக்கு ஆபத்து. குழந்தைகளின் உடலில் 1/10 தீப்புண் பட்டாலும் உயிருக்கு ஆபத்து வந்துவிடும். அவர்களின் உடலுக்குக் கவசம் போன்றிருந்த தோல் போய்விட்டபடியால் வெளியே உலாவும் எந்த கிருமியும் சுலபமாக உடலில் புகுந்து ஆபத்தை விளைக்கும். தீப்புண்ணினால் நரம்புகளின் நுனிப்பகுதிகள் எல்லாம் அறுந்து விட்டபடியால் வலி தாங்க முடியாது. இந்நிலையில் மேலே சொன்ன மருந்தையும் தடவாமல், சுவாசம் போவதற்கு இடம் விட்டு விட்டு உடல் முழுவதையும் சுத்தமான துணிகளால் நன்கு போர்த்தி மூடி விட்டு விரைந்து மருத்துவ நிலயத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். அவர்களுக்குத் தாகம் இருந்தால் காய்ச்சி ஆறின தண்ணீரைக் கொடுக்கலாம். மயக்கமுற்றிருந்தால் தண்ணீர் கொடுக்க வேண்டாம்; ஏனென்றால் அது தொண்டையை அடைத்து மேலும் சிக்கலாக்கும்.

— சுட்டிபாரதி

அடுத்து: முதலுதவி — நாய்க்கடி

## மத்திய கல்விக் குழுவின் பள்ளிகள்



மத்திய கல்விக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட பள்ளிகள் இந்தியா முழுவதும் சுமார் 1200க்கு மேல் இருக்கின்றன. இதில் சுமார் 2,40,000 மாணவ — மாணவியர் படிக்கின்றனர். ஆசிரிய ஆசிரியைகள் சுமார் 60,000 பேர் வேலை செய்கின்றனர். இப்பள்ளிகள் அரசு மானியம் பெறாமல் மாணவர்களின் கல்விக் கட்டணத்தின் மூலம் நடைபெறுகின்றன.

தமிழ்நாட்டில் மட்டும் இப்படி சுமார் 100 பள்ளிகளுக்கு மேல் இருக்கின்றன. சுமார் 6,000 ஆசிரியர்களுக்கு மேல் இவற்றில் பணி புரிகின்றனர்.

ஆசிரியர்களின் கல்வித் தகுதி, அரசு சம்பள விகிதத்தில் (மத்திய அல்லது மாநில அரசு சம்பள விகிதம்) சம்பளம், விளையாட்டுத் திடல், விஞ்ஞானக் கூடம், நிரந்தர பள்ளிக் கட்டிடம் இவைகளை வைத்து மத்திய கல்விக் குழு பள்ளி நடத்த அனுமதி கொடுக்கின்றது. ஆனால் பெரும்பாலும் பள்ளிகளை அப்படி நடத்துவதில்லை. →

FREE E- BOOKS , www.thamizham.net.,

1. ஆசிரியர்களுக்கு அரசு பரிந்துரைத்த சம்பள விகிதமோ, மற்ற அகவிலைப்படி, வீட்டுப்படி, நகர ஈட்டுப்படி இவை எதுவும் முறையாக அளிப்பதில்லை. ஆனால் அளிப்பதாக நிர்வாகத்தினர் பொய் டாக்குமெண்ட் தயார் செய்து போர்டுக்கு அனுப்புகின்றனர்.

2. ஆசிரியர்களுக்கு வேலை நிரந்தரத்திற்கு உத்திரவாத கடிதம் கிடையாது.

3. செக் மூலம் பணம் கொடுக்க வேண்டும் என்ற விதி இருப்பதனால் முறையான சம்பளத்திற்கான செக்கில் கையெழுத்து வாங்கி அதில் குறிப்பிட்டத் தொகையை மட்டும் ஆசிரியர்களுக்கு அளிப்பது.

4. பெரும்பாலும் பெண்களை வேலைக்கு அமர்த்தி அவர்களை மிரட்டியே வேலை வாங்குவது.

5. தங்கள் விருப்பம் போல் கல்வித் தகுதி இல்லாதவர்களுக்கும் வேலை அளிப்பது.

6. ஆசிரியர்கள் சங்கம் அமைத்து சம்பளம் மற்ற வசதிகள் கேட்டால் அடியாட்களை வைத்து மிரட்டுவது.

மொத்தத்தில் கொத்தடிமைகளாக ஆசிரியர்களை நடத்துகின்றனர்.

இதுபோன்ற பிரச்சனைகளைத் தீர்க்க தென் மண்டல அளவில் பிராந்திய அலுவலர் ஒருவர் இருக்கின்றார். ஆனால் ஆசிரியர்களின் பிரச்சனைகள் ஓயவில்லை. இதற்கு முடிவு ஏற்படாதா? ஆசிரியர்களுக்கு நல்ல காலம் பிறக்காதா?

— இரா. பூபதி, அமைப்பு செயலர்," ஆசிரியர், ஆசிரியர் அல்லாதார் சங்கம், சென்னை.

தமிழன் குரல்: ஈழ விடுதலை — தமிழின எழுச்சி திங்கள் இதழ். ஆண்டுக் கட்டணம்: ரூ.7/— முகவரி: ச. துரை முருகானந்தம், 118, பழைய அஞ்சலகத் தெரு, மானாமதுரை — 623 006.

FREE E- BOOKS , www.thamizham.net.,

அபாய எச்சரிக்கை:

# சுயநிதி கல்வி நிறுவனங்கள்

உயர் கல்வியை, சிறப்பாக பொறியியல் மருத்துவக் கல்விக் கூடங்களை நிறுவுவதில் மத்திய மாநில அரசுகள் இதுவரை கொஞ்சம் கட்டுப்பாட்டுடன் விளங்கின. யாரும் நினைத்தபடி இக்கல்லூரிகளைத் தொடங்கி விட முடியாது.

அண்மையில் தமிழக அரசு, தங்கள் சுயநிதியுடன், வசதியானவர்கள் இக்கல்விக் கூடங்களை அமைத்துக் கொள்ள அங்கீகாரம் அளித்துள்ளதன் மூலம் இதுவரை சீர்தூக்கி ஒப்புக் கொள்ளப்பட்ட உயர்கல்வி கொள்கையை தவிடு பொடியாக்கி விட்டது.

இந்த அங்கீகாரத்தைப் பயன்படுத்தி கடந்த ஆண்டு மட்டும் 16 பொறியியற் கல்லூரிகளும், 48 பாலிடெக்னிகளும் தோன்றியுள்ளன. மருத்துவக் கல்லூரிகளும் விரைவில் தொடரும். பல வட்டிக்கடை மார்வாடிகளும், திரைப்பட டிஸ்ரிபியூட்டர்களும், மருந்து கம்பெனிக்காரர்களும், அரசின் ஆசியுடன் இந்த கல்வி நிறுவனங்களை புதிய லாபகர வணிகமாகத் தொடங்கி பெரும் முதலீடு செய்துள்ளனர்.

இதனால் —

- பின்தங்கியவர்களுக்குக் கல்விக்கூடங்களில் ஒதுக்கீடு என்ற கொள்கை சாகடிக்கப்பட்டு விட்டது.
- காசு கொடுத்து, யாரும் இவற்றில் நுழையலாம். தரமான கட்டடங்கள், ஆசிரியர்கள் இங்கு இல்லை. எனவே வெளி வரும் மாணவர்களின் தரம் மிகக்கீழாக இருப்பதுடன், பொறியியல், மருத்துவப் பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டமும் பல மடங்காகும்.
- இந்நிறுவனங்களைத் தொடங்க சாதி, மத சக்திகள் காட்டுகின்ற ஆர்வத்தைப் பார்க்கும் போது, இதனால் இவ்வுணர்கள் ஊக்குவிக்கப்பட்டு, சமூக ஒற்றுமை, ஒருமைப்பாடு சீரழியும்.

— உலகப்பன்



FREE E- BOOKS , www.thamizham.net.,



# திரையுலகப் பிரமுகர்கள்:
# இயக்குநர் கே. பாலசந்தர்

— 9 —

ஒரு படைப்பாளியின் படைப்புகள் தொடர்ந்து கொண்டிருக்கும் போது — அதாவது அவரது ஆக்கம் நின்று போவதற்கு முன்பு — அவரது படைப்புகளைப் பற்றி ஒட்டு மொத்தமாகப் பரிசிலனை செய்து தீர்மானகரமான ஒரு முடிவுக்கு வருவது தவறான மதிப்பீட்டிற்கே இட்டுச் செல்லும். ஏனெனில் துவக்கத்தில் பிற்போக்காகவும், இறுதிக் கட்டத்தில் முற்போக்காகவும் ஒரு சிலர் துவக்கத்தில் முற்போக்காகவும், பிற்பகுதியில் அதற்கு நேர் எதிராகவும் படைப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். துவக்கத்திலும் இடையிலும், இறுதியிலும் முற்போக்கான பாதையிலேயே பயணம் செய்தவர்கள் மிகச் சிலரே. இந்நிலை கலை இலக்கியத் துறைக்கு மட்டுமின்றி அரசியல் பொருளாதாரம் உட்பட அனைத்து அரங்குகளுக்கும் பொருந்தும்.

அந்த வகையில் டைரக்டர் பாலசந்தரின் படைப்புகளைப் பற்றியோ — அவரது அரசியல் மற்றும் சமூகவியல் கருத்தோட்டங்களைப் பற்றியோ இறுதியான மதிப்பீட்டிற்கு வருவது இப்போது சரியல்ல.

எனவே அவர் காலத்தில் அவரைச் சுற்றி நிகழ்ந்த சாதனைகளையும், அதில் அவருக்குள்ள பங்கையும் பகுத்து பார்ப்பதோடு அவரால் அவ்வளவு தான் சாத்தியமா? மேற்கொண்டு அவரால் என்ன சாதனைகளை நிகழ்த்தியிருக்க முடியும்? எதிர்காலத்தில் அவைகளை நிறைவேற்றுவாரா? என்பதை பரிசீலிப்பதோடு இக்கட்டுரைத் தொடரை முடிப்பது உசிதமானது.

விந்தை மிகுந்த விஞ்ஞான அற்புதங்களில் இன்றுவரை அதிசயக் கவர்ச்சியாக நீடித்து வரும் திரைச்சாதனம் தோன்றி 40 ஆண்டுகள் கழித்து அதில் பிரவேசித்தவர் பாலசந்தர்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

நாடக அனுபவத்தோடு — கல்லூரிக் கல்வியின் அறிவோடு — காமிரா வழியாக வெள்ளித் திரையை நோக்கியவர்.

எம்.ஜி.யார். — சிவாஜி — ஜெமினி என்ற மூவேந்தர்களின் ஆளுகை உச்சக்கட்டத்தில் இருந்த போது பாலசந்தரின் திரை வாழ்க்கை தொடங்கியது. இந்த ஜாம்பவ நடிகர்களின் சாம்ராஜ்யம் தளரத் துவங்கியதே கே.பி.யின் துணிச்சலான முயற்சிகளால் தான். இந்தத் தளர்வு இரண்டு பெரிய மாற்றங்களுக்கு வித்திட்டது. ஒன்று — ஏராளமான இளைஞர்கள் படவுலகில் புதிய வேட்கையோடு குவிந்தார்கள். இரண்டு — நடிகர்களுக்காக படம் பார்ப்பது என்ற நிலை மாறி டைரக்டருக்காக படம் பார்க்கும் பழக்கம் தோன்றியது.

— மத்திய தரவர்க்கத் தனி நபர்களின் மனப் போராட்டங்கள் — அளவான வசனங்கள் பயன்படுத்தப்பட்டன.

— நடிப்பில் கூட புதிய பாணி ஏற்பட்டது. அளவுக்கு மீறிய அங்க சேட்டைகள் இல்லாமல் — உணர்ச்சிகளை இயல்பாகவும் யதார்த்தமாகவும், பாவனைகளோடும் வெளிப்படுத்தும் பாங்கு தோன்றியது.

வெறும் உணர்வுக்கு மட்டுமின்றி அறிவுக்கும் தீனிபோடக் கூடிய தனது படங்களால் ரசிகர்களின் தரத்தை தன் நிலைக்கு உயர்த்தும் முயற்சியைக் காண முடிந்தது.

நடிப்புத் துறையில் மட்டுமின்றி பல துறையில் திறமையுள்ள பலரை அறிமுகம் செய்த — செய்து வரும் இயக்குனர்களில் இவர் முதன்மையானவர்.

இயக்குனராக இருந்து கொண்டே லட்சுமியை இயக்குனராக்கியவர். எஸ்.பி.முத்துராமன், அமீர்ஜான் போன்ற இயக்குனர்கள் மூலம் தமது சொந்த படங்களை எடுத்து வருபவர்.

இதுவரை வெளிவந்துள்ள இவரது அனைத்துப்படங்களையும் தொகுத்து பரிசீலிக்கிற போது —

பெண்ணுரிமை, காதல், மனித நேயம் ஆகிய மூன்று அம்சங்களே பிரதானமாக அவை வலியுறுத்துகின்றன



FREE E- BOOKS , www.thamizham.net.,

எனலாம். இவை மேல் தட்டு வர்க்கத்தினருடையதல்ல. அதே நேரத்தில் உழைக்கும் ஏழை எளிய மக்களுடையது மல்ல. மாறாக மத்திய தர வர்க்கத்தினரின் மன உந்தல்களே! இவற்றில் ஒன்றிரண்டு (நிழல் நிஜமாகிறது, தண்ணீர் தண்ணீர்) விதிவிலக்கானவை.

ஆபாசம், அருவருப்பு, இரட்டை அர்த்த வசனங்கள், வக்கரிப்புகள், விரசம் போன்றவைகள் இடம் பெறும் துணிச்சல் பாலசந்தர் படங்களில் இன்று வரை இல்லை.

ஆரம்பத்தில் சமூகப்படம் எடுத்து பிற்பகுதியில் மிருகங் களுடன் சேர்ந்து கொண்ட தேவர் பிலிம்ஸ், ஆரம்ப காலத்தில் சமூகப் படங்கள் எடுத்து பிற்பகுதியில் சரித்திர மற்றும் புராணப் படங்களுக்குத் தாவிய ஏ.பி. நாகராஜன், கே.எஸ். கோபாலகிருஷ்ணன், அன்று முதல் இன்று வரை ஆபாசம் கலந்த மாயாஜாலப்படங்களைக் குவித்து வரும் விட்டலாச் சாரியா, கடைசி வரை துப்பறியும் படங்களையே அளித்த எஸ். பாலசந்தர் போல் இல்லாமல் ஆரம்பம் முதல் இன்று வரை ஆரோக்கியமான சமூகப் படங்களையே கே.பி. எடுத்து வருகிறார் என்பது ஒரு விசேஷ செய்தியாகும்.

தமிழ்நாட்டில் இதர படங்களையும், இதர படைப்பாளி களின் முயற்சிகளையும் ஒப்பிடுகிற போது பாலசந்தரின் இச்சாதனை பாராட்டிற்குரியதே. ஆனால் இந்தியாவுடனும், இதர நாடுகளுடனும் இணைத்துப் பார்க்கிற போது தான் பாலசந்தர் போக வேண்டிய தூரம் இன்னும் வெகு தூரம் இருக்கிறது என்பது தெரிகிறது.

சமகாலத்துப் பிரச்சினையையும், வாழ்வையும், உலகம் தழுவிய மனிதனையும் மொழி, நாடு என்ற எல்லைக் களுக்கப்பால் கடந்து நிற்கும் வண்ணம் பாலசந்தரின் திரைப்பயணம் துரிதப்பட வேண்டும் என்பதே நமது வேண்டுகோள். அதற்குரிய காலம் மிகச் சரியாக கனிந்திருக் கிறது. இதை நிறைவேற்ற முன்வரும் படைப்பாளியாக இருந்தாலும் அவருக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும் என்பது சர்வ நிச்சயம்.

— டி.எஸ். ரவீந்திரதாஸ்

முற்றும்

FREE E- BOOKS , www.thamizham.net.,


**புத்தகப் பிரிவு**

# சென்னை மாநகர்

ஆசிரியர்: மா. சு. சம்பந்தன்

விலை ரூ 10/— பக்கங்கள் — 32 + 272

வெளியீடு —
தமிழர் பதிப்பகம்,
243 (81) லிங்கிசெட்டித் தெரு
சென்னை — 600 001




இந்நூல், சென்னை மாநகர் பற்றிய 'தகவல் கருவூலம்' எனச் சொல்லக்கூடிய வகையில் சென்னை நகர் பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து உருவாகி வளர்ந்த வரலாறு புள்ளி விவரங்களுடன் சுவையாக எழுதப்பட்டுள்ளது.

சென்னை கேசவர் என்கிற கடவுளின் பெயரிலிருந்தோ, ஆங்கிலேயருக்குச் சென்னைப் பகுதியினைப் பட்டயம் செய்து கொடுத்த வேங்கடப்ப நாயக்கனின் தந்தையார் சென்னப்ப நாயக்கனின் பெயரிலிருந்தோ சென்னை என்கிற பெயர் உருவாகியிருக்க வேண்டும்.

ஆங்கிலேயர் முதலில் கோட்டை கட்டிய பகுதியினை ஆண்டு அனுபவித்து வந்த மதுரேசன் என்பவன் அந்த ஆங்கிலேயருக்கு விட்டுக் கொடுத்ததின் காரணமாக அவனது வேண்டுகோளின் படி மதராஸ் பட்டணம் எனப் பெயர் வைக்கப்பட்டது.

சிறிய அளவில் தறிகளை வைத்துக் கொண்டு நெசவுத் தொழில் செய்து கொண்டிருந்தவர்களின் குடியிருப்புகள் இருந்த பகுதி சின்னதறிப் பேட்டை என வழங்கப்பட்டு நாளடைவில் சிந்தாதிரிப் பேட்டையாக மருவிற்று.

கம்பெனி ஆட்சி காலத்தில் 1646 — 1647 ஆண்டுகளில் சென்னையில் முதல் பஞ்சம் ஏற்பட்டு 30,000 பேர் மாண்டனர். 1876 — 1877 ஆம் ஆண்டுகளில் நிலவிய கொடிய பஞ்சம் தாது வருடக் கருப்பு அல்லது பஞ்சம் என அழைக்கப்பட்டது. ஆங்கில ஆட்சியில் 1770 முதல் 1906 வரை சுமார் 22 பஞ்சங்கள் ஏற்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

பஞ்சகாலத்தில் பஞ்ச நீப்பு வேலையின் அறிகுறியாகக் கிழக்குக் கரையோரக் கால்வாய் வெட்டப்பட்டது. இதுவே பின்னர் 261 மைல் நீளமுள்ள பக்கிங்காம் கால்வாயாக வளர்ச்சியுற்றது. இதே சமயத்தில் பக்கிங்காம் ஆலையும் துவக்கப்பட்டது.

தம்புச் செட்டியும், லிங்கி செட்டியும், சுங்கு ராமனும் கொண்டி செட்டியும் ஆங்கில வர்த்தகக் கழகத்திற்கு மிக வேண்டியவர்கள் ஆகவே அவர்கள் பெயரில் தெருக்கள் இப்பட்டணம் முதலில் அமைந்தபோதே ஏற்பட்டு விட்டன.

டிசம்பர் 30, 1687 அன்று சென்னை மாநகராட்சி தோற்றுவிக்கப்பட்டது. முதல் நகரத் தந்தை நத்தானியேல்

FREE E- BOOKS , www.thamizham.net.,

இக்கிலைவன் ஆவார். அவர் பின்னர் ஆணையராகவும் பணியாற்றினார். எந்தவித குற்றச்சாட்டுகளுக்கும் இடமின்றி தூய்மையாக நிர்வாகம் நடத்தி ஓய்வு பெற்றவர் எனவும் — சென்னை நகரின் எல்லையை விரிவு படுத்துவதில் தீவிர ஆர்வம் காட்டி உழைத்தவர் எனவும் இவர் புகழப்படுகிறார்.

சென்னை நகரில் 1871 ஆம் ஆண்டு ஒழுங்கான முறையில் முதல் குடி மதிப்பு எடுக்கப்பட்டது. மக்கள் தொகை 3,97,552 (சுமார் 4 லட்சம்) இருந்தனர்.

பல தெருக்களின் பெயர்கள் பழங்காலத்தில் வாழ்ந்தவர்களின் பெயரால் அமைந்தவையாகும். ஆர்மீனியர் தெரு, மூர் தெரு முதலியன முறையே மூர் வணிகர்களையும், ஆர்மீனிய வணிகர்களையும் நினைவு படுத்துவதாக அமைந்துள்ளது. வாலாஜா சாலை ஆற்காடு நவாப்பை என்றும் நினைவில் கொள்ளச் சொல்லும்.

இன்றைய சென்னை கலாச்சாரத்தின் மூலக் கூறுகளைப் புரிந்து கொள்ள வைக்கிறது இந்நூல் — வெங்கட் — மோகன்

## எமக்கு வந்தவை...

இறால் வளர்ப்பு (16.50) டாக்டர்கள் வி. சுந்தர்ராஜ், பி. நடராஜன் — ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக் கேணி, சென்னை — 600 005.

முதலீடு இல்லாமல் தொழில் வழிகள் (12.00) அ.ம. இலக்குவன் — சங்கீத வாணி, 91, வி.எம். தெரு, மயிலாப்பூர், சென்னை — 600 004.

நிரந்தரமின்னல் (ஹைக்கூ கவிதைகள் 3.00) கழனியூரன் — கழனி பதிப்பகம், கழுநீர்குளம் 627 861, திருநெல்வேலி மாவட்டம்.

உறுதியாயிரு! (7.00) மு. மணிமுடி — பொன்முத்துப் பதிப்பகம், 398/டி சிபிட்டரி சாலை, சென்னை — 600 021.

பேனா நண்பர்கள் (2.00) — 'வாரமுரசு' 2—சி ஆறுமுகம் ரோடு, நடராஜா காலனி, சிவகாசி.

தமிழும் சமஸ்கிருதமும் (4.50) ம.பொ.சி — பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக் குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை — 600 004.

யோகாசனம் (9.50) பிறவைத் தொண்டன் — மயிலவன் பதிப்பகம், 7, எம்.கே. அம்மன் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை — 600 004.

அறிஞர் அண்ணாவின் முத்துக் குவியல் (2.50) தொகுப்பு: அன்புப்பழம் நீ

ஏ, தாழ்ந்த தமிழகமே! (2.75) — அறிஞர் அண்ணா

தமிழரின் மறுமலர்ச்சி (3.25) — அறிஞர் அண்ணா

பேராசிரியர் அண்ணா (3.50) — புலவர் செந்துறை முத்து

நமது நாடு (5.50) அறிஞர் அண்ணா மேற் கண்ட ஐந்து நூல்களும் கிடைக்கும் இடம்: பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை — 600 017.

சிறை (15.00) அனுராதா ரமணன்
விட்டில் பூச்சிகள் (6.00) பாலகுமாரன்
பெரிய புள்ளிகள் (8.00) வாஸி
வெளியீடு: கனிமுத்துப் பதிப்பகம், அம்பாள் பில்டிங், 727, அண்ணா சாலை, சென்னை — 600 006.

ஒரு கொடியில் இரு மலர்கள் (7.50) எம்.எஸ். ரவீந்திரன்; வாழ வழிகாட்டும் மனத்தின் சக்தி (5.00) மெர்வின்; வசியம் வாழ்க்கைக்கு அவசியம் (5.00) மெர்வின்: மென்மையான பேச்சு மேன்மை தரும் (6.00) மெர்வின்; வெளியீடு — பூங்காற்று பதிப்பகம், 4, சபாபதி தெரு, குரோம் பேட்டை, சென்னை — 600 044.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## பயண அனுபவங்களின் பாதை வெளிச்சங்கள் 2

### 'நாணயம் என்ன விலை?'

மனித பலகீனங்கள் எங்கும் எவனுக்கும் பொது விழுக்காட்டுக் கணக்கைக் கொண்டே, கணக்கிட வேண்டும். திருட்டு எங்கும் இருக்கிறது; ஏமாற்று, பொய், நாணயமின்மை எல்லாம் அங்கும் இருக்கின்றன. ஆனால் அவற்றின் அளவு குறைவு; மிகக் குறைவு.

மருத்துவம், உணவு, கல்வி, நீதி, ஆட்சி முதலானவை மனித சமூகத்தின் உயிர் நாடிகள்; இந்த நாடிகளே இந்தியாவில் ஊழல் மயமாகி விட்டன. நஞ்சு என்று ஒரு மருந்தை குடித்தால் பிழைத்து நடமாடுகிறான்; 'டானிக்' என்று ஒரு மருந்தைக் குடித்தால், செத்து விடுகிறான். இப்படிக் கலப்படம் இங்கே ஒவ்வொரு பொருளிலும் — அரிசி + கல், மிளகு + பப்பாளி விதை, காப்பித்தூள் + பழைய தூள், வெண்ணெய் + மாவு, எண்ணெய் + ரப்பர் ஆயில் — என அடிப்படை நாணயத்தை கல்லறைக் குழிக்கு இந்தியர்கள் அனுப்பிவிட்டார்கள்.

ஒரு குழந்தை கூட டாக்சியில் முறையாகப் பயணம் செய்து திரும்ப முடியும். மிச்சக்காசு அப்படியே எண்ணிக் கொடுக்கப்படும். கடைகளில் பொருள்களை நம்பி வாங்கலாம். தயார் உணவுப் பொருள்கள் அனைத்திலும் பயன்படுத்தும் கடைசி நாள் குறிக்கப்பட்டிருக்கும்; ஒவ்வொரு மருந்துப் புட்டியிலும் அவ்வாறே. மாறாக, இந்தியர்கள் சவுத் ஆப் (யூ.கே), ஹாங்காங், லா பால்மாஸ் முதலான இடங்களில், கடைகள் வைத்து விற்கிறார்கள்! இந்தியக் கடைகளில் பொருள் வாங்கினால் — அவர்கள் ஏமாற்றி விடுவார்கள் என்ற எண்ணம் எங்கும் பரவி இருக்கிறது! மேற்கண்ட மூன்றிடங்களிலும், வெள்ளையர் கடைகளை விட விலைகுறைவாக இருக்கிறதே என்று (போலிப்) பொருள்களை வாங்கி ஏமாந்தவர்களில் நானும் ஒருவன். போயும் போயும் நம்நாட்டானையே ஏமாற்றுகிறோமே என்று கூடப் பார்க்காத நாட்டுப்பற்று, தேசிய ஒருமைப்பாடு, வெளிநாடு வாழ் பல (வட) இந்தியர்களிடம் நானே நேரில் கண்டுள்ளேன். கிழக்கு ஆப்பிரிக்காவில் பல நாடுகளில் 'இந்தியர்' என்றாலே 'பிராடு', 'கூலி', 'பொய் சொல்கிறவர்கள்' என்ற திருப்பெயர்கள் உள்ளன.

(தொடரும்) — அறம் —

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஸ்ரீராம் டிரஸ்ட்
145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600001.
போன்: 28545

அன்பார்ந்த சிந்தனைச் சிற்பிகளே,
இந்த இளைஞர் ஆண்டில்,
உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

நம் நாட்டு இளைஞர்களுக்கு வழிகாட்டி, அவர்களுக்கு ஏற்ற திட்டங்களை வகுத்துக் கொடுத்து அறிவுரைகள் கூறி, நாட்டு முன்னேற்றப் பணியில் அவர்களை ஈடுபடுத்துவதே எங்கள் நோக்கம். அதற்கான சிந்தனைக் கட்டுரைப் போட்டியிது.

இதன் மூலம் சிறந்த எழுத்தாளர்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பினை ஸ்ரீராம் டிரஸ்ட் (அமுதசுரபி வெளியீட்டுடன்) பெருமையுடன் அளிக்க முன்வந்துள்ளது.

கட்டுரைப் போட்டியின் தலைப்பு:
கனவுகளைக் கரை சேர்ப்போம்.

இதற்கான இரு பரிசுகள் - மொத்தம் ரூ. 20,000

1. மாண்புமிகு எம். ஜி. ஆர் சார்பில் அளிக்கப்படும் பரிசு - ரூ. 10,000. 20 முதல் 35 வயது வரை உள்ள எழுத்தாளர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.
2. ஸ்ரீராம் டிரஸ்ட் அளிக்கும் பரிசு - ரூ. 10,000. 35 வயதுக்கு மேற்பட்ட எல்லா எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

கட்டுரை கையெழுத்துப் பிரதியாகவோ, டைப் செய்தோ 400 பக்கங்களுக்குள் இருக்க வேண்டும். பரிசு பெறும் கட்டுரை புத்தக வடிவில் வெளியிடப்படும்.
அனுப்ப வேண்டிய முடிவு தேதி: 30.4.85.
மேலும் விபரங்களுக்கு: 'அமுதசுரபி' மார்ச் இதழைப் பார்க்கவும்.

அமுதசுரபி (ஸ்ரீராம் டிரஸ்ட்)
145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600001.
தபால் பை: 5043. போன்: 28545.

ADWAVE

# நமது விளாம்பழ மருத்துவம்

*இந்த நோய்கள் உங்களுக்குண்டா?:* கண் பார்வை மங்கல், சதா வாயில் கசப்பு, காலையில் மஞ்சளாக வாந்தி எடுத்தல், பித்த கிறுகிறுப்பு, கை கால்களில் அதிக வேர்வை ஏற்பட்டு சில்லென்று போதல், பித்தம் காரணமாக — இளநரை, நாவில் ருசியற்ற நிலை, அளவுக்கு மீறி உமிழ் நீர் சுரத்தல், தொண்டைப்புண், கல்லீரல் இயக்கம் சீர்குலைந்து ஏற்படும் பிரச்சனைகள் — எதுவாயினும் கவலை வேண்டாம். தினசரி காலை உணவிற்குப் பின் நன்கு பழுத்த விளாம்பழத்தை உடைந்து உட்பகுதியை மட்டும் சர்க்கரை அல்லது வெல்லம் சேர்த்து 21 நாட்கள் உண்டால் பூரண குணமாகும்.

*அடிக்கடி விளாம்பழம் சாப்பிட்டால்...* இரத்தத்தில் கலக்கும் நோய் அணுக்கள் மடியும். எனவே உடலை நோய் தாக்காது. இரத்தம் சுத்தமாகும் அஜீரணக் கோளாறு அண்டாது. அறிவுத் தெளிவு ஏற்படும்.

*சிறுவர்களுக்கு:* பள்ளிப் பாடத்தை அடிக்கடி மறந்து விடும் சிறுவர்களின் இக்குறை நீங்க, நினைவாற்றல் பெற, எலும்புகள் உறுதியாக விளாம்பழம் உதவும்.

*வயோதிகர்களுக்கு:* இப்பழம் ஒரு டானிக். 3 நாட்களுக்கு ஒரு முறை உண்டால் எலும்புகள் பலம் பெறும். பற்கள் ஆட்டம் காணாது. புதிய இரத்தம் உற்பத்தியாகி நினைவாற்றல் அதிகப்படும். இதயத்துடிப்பு சீராகும். மனக்கலக்கம் மறைந்து மகிழ்வும், நடையில் தெம்பும் ஏற்படும்.

*பெண் வசிய மருந்துக்கு மாற்று:* எல்லாவற்றையும் மறந்து ஒரு குறிப்பிட்ட பெண்ணுடன் பித்துப்பிடித்து அலைய வசிய மருந்து தரப்படுவதாகக் கேள்வியுறுகிறோம். இது உண்மையோ பொய்யோ எதுவாயினும் பெண்கள் தொடர்பால் சிக்கிச் சீரழியும் நபர்களை மீட்க விளாம்பழத்தை சதையையும் ஓட்டையும் சேர்த்து நாளுக்கு 1 பழம் விதம் 21 நாட்கள் தருக. பெண் வசியத்தையும் தீயவுணர்வையும் இது முறித்து மோக வெறியர்களை மனமாற்றும். "விட்டதடி ஆசை விளாம்பழ ஓட்டோட" என்பது பழமொழி!


(அடுத்து நமது 'மிளகு' மருத்துவம்) சித்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## ஐந்திணை வழங்கும் அருமையான நூல்கள்

| | | |
|---|---|---|
| வேர் இல்லாத செடிகள் — தேவபாரதி | | 8.50 |
| கேட்டிருப்பாய் காற்றே — செ. யோகநாதன் | | 12.00 |
| இலக்கியத்தில் சமுதாயப் பார்வை — ஜி. ஜான் சாமுவேல் | | 13.75 |
| கடலோரப் பூக்கள் — மகரிஷி | | 16.50 |
| ஓர் இலக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள் — ஜெயகாந்தன் | | 21.50 |
| சுதந்திரவீரன் சுபாஷ் சந்திர போஸ் — சாம்பசிவம் | | அச்சில் |
| தமிழ் இலக்கிய வரலாறு — மது. ச. விமலானந்தம் | | அச்சில் |
| புதுமைப்பித்தன் கதைகள் — புதுமைப்பித்தன் | | அச்சில் |
| அதிசய அண்டார்டிகா — கு. ராஜாராம் | | அச்சில் |

ஐந்திணை பதிப்பகம்
எண் 15, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை — 600 005.



# அறிஞர் ஐன்ஸ்டீன் மிக மிகப் புதிய தகவல்கள்

சமீபத்தில் வெளியான Other Einstein என்ற நூலில் ஐன்ஸ்டீன் பற்றிய அந்தரங்கமான தகவல்கள் பல எழுதப்பட்டிருக்கின்றன. 'அந்தரங்கம்' என்ற சொல் இங்கே நல்ல அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று. இந்நூல் ஐன்ஸ்டீனை உன்னத மனிதராகக் காட்டுகிறது.

1919-ல் ஐன்ஸ்டீன் தனது முதல் மனைவி மைலிவாவை விவாகரத்து செய்ய நேர்ந்தபோது மனைவியிடம் அன்பாக உறுதியளித்தார்: 'சீக்கிரமே கிடைக்கும் நோபல் பரிசுப் பணம் முழுக்க உனக்குத் தந்து விடுகிறேன்'

விஞ்ஞான ஆய்வுக் கழகத்தில் வேலைக்குச் சேர்ந்த புதிதில் 'சம்பளம்' பற்றிக் கேட்டபோது தனக்கு மாதம் 3000 டாலர் மட்டுமே போதும் என்று சொல்லி விட்டார். ஆனால் நிறுவனம் இவருக்கு மாதம் 15,000 டாலர் தர முடிவு செய்தபோது 'என் தேவைகளுக்கு இவ்வளவு பணம் மிக அதிகம்' என்று கூறி மறுத்தாராம்.

1921-ல் நோபல் பரிசு பெற்ற விஷயத்தை தனது டைரியிலோ, நண்பர்களுக்கோ ஒரு தகவலாகக் கூட அதை பதித்துக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒரு வருடம் கழித்து ஒரு சர்வதேச நிறுவனம் அவருக்கு எழுதிக் கேட்டிருந்த bio-data குறிப்புகளில் Honours பகுதியில்கூட அவர் தான் பெற்ற நோபல் பரிசு கௌரவத்தை எழுதிக்கொள்ளவேயில்லை!

பள்ளிப் பிள்ளைகளுக்கு வீட்டுக் கணக்கு செய்வதில்கூட பல மணி நேரங்கள் உதவுவாராம்.

மரணப்படுக்கையிலிருந்த போது ஒரு ஆபரேஷன் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டியதற்குக் கூட 'வேண்டாம்' என்று மறுத்து விட்டுச் சொன்னாராம்:


'வாழ்க்கையை செயற்கையாகக் கமத்து நீட்டிப்பது கௌரவமற்றது. வாழ்க்கையின் கௌரவத்திற்கு என் பங்கை நான் ஆற்றி விட்டேன். என்னுடைய நேரம் வந்துவிட்டது.'

இறப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் ஒட்டோ நாதன் Otto Nathan என்ற தனது நண்பரிடம் மனித உரிமைகள் (Civil Liberties) பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார். கையெழுத்திட்ட கடைசி அறிக்கை அணு ஆயுதத் தடை பிரகடனத்தில்தான்!

FREE E- BOOKS , www.thamizham.net.,

# மின்சாரத்துறையில் என்ன கோளாறு?

மின்சாரத் துறையில் எங்கே கோளாறு என்று தெரிந்துக் கொள்ளுவதற்கு, வாரியத்திற்குள் நுழைந்தால் நம்மை வரவேற்கும் வாசகம்:



கங்கோத்ரியில் விஷத்தைக்
கலந்துவிட்டு
கல்கத்தாவில் கங்கையை
சுத்தப்படுத்த முயற்சிப்பது வீண்
மூலஸ்தானத்தில் மாற்றம்
வேண்டும்

இந்த வசன கவிதையை எழுதி வைத்திருப்பவர்கள் தமிழ் நாடு மின்கழக கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்! இவர்கள் விரும்பும் மூலஸ்தான மாற்றம், மின்சார வாரியத்திலா அல்லது தமிழக ஆட்சி பீடத்திலா அல்லது அரசியலமைப்பிலா அல்லது இந்த எல்லாவற்றிலுமா — எது எப்படி இருந்தாலும் அழகான வரிகள்

இந்த சங்க நிர்வாகிகளோடு பேசியதில் தெரிய வந்தது, அவர்கள் முதலில் விரும்பும் மூலஸ்தான மாற்றம், மின்சார வாரியத் தலைவர் திரு. விஜயராகவன் அவர்களைத்தான்! அவர்களோடு பேசியபோது, அவர்கள் சொன்னவை:

"திரு. விஜயராகவன் தன்னைத் தட்டிக் கேட்க தொழிற்சங்கம் என்ற ஒரு அமைப்பே இருக்கக் கூடாது என்று நினைக்கிறார்; தொழிற்சங்க உரிமைகளை அங்கீகரிக்கும் இந்த ஜனநாயக அமைப்பின் கீழ் தான் ஒரு தீவாக இருக்க முயல்கிறார்.

"இதுவரை உள் அமைப்புக்குள் (within the system) மட்டுமே செய்து வந்த வேலை மாற்றங்களை, இப்போது அதற்கு அப்பாலும் அதாவது தமிழ்நாட்டில் எந்த இடத்தி

FREE E- BOOKS , www.thamizham.net.,

லிருந்து எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் மாற்றலாம் என்று ஆணை பிறப்பித்தார். பின்னர் இதுவரை மின்சார வாரியத்தின் வரலாற்றிலேயே இல்லாத ஒன்றைச் செய்தார்! அது விரும்பத்தகாதவர்களின் (unwanted elements) பட்டியல் கேட்டது! அந்த பட்டியலில் யார் யாரைச் சேர்க்க வேண்டும் என்று எந்த கொள்கையும் (Policy) தரப்பட வில்லை! எனவே இந்த விரும்பத்தகாதவர்களின் பட்டியலில் தன்னுடைய சாதியைச் சேராதவர்கள், தான் கடன் கேட்டால் கொடுக்காதவர்கள், தன் வீட்டுக்கு வந்து சொந்த வேலையைச் செய்ய மறுத்தவர்கள், மேலிடத்து ஊழல்களை அம்பலப் படுத்தியவர்கள் — இவர்கள் எல்லாவற்றிக்கும் மேலாக தொழிற்சங்கத்தில் தீவிரமாக இருந்தவர்கள் — இவர்கள் எல்லாம் இடம் பெற்றார்கள்! அவர்கள் அனைவரையும் இஷ்டம் போல இடம் மாற்றினார்கள்!' அறந்தாங்கியில் இருப்பவரை அரக்கோணம் மாற்றினார்கள்! இதற்கு ஒரே காரணம் இரண்டு ஊர்களும் 'A' என்ற எழுத்தில் ஆரம்பிக்கின்றன என்பது தான்! இது நியாயமா சார்?


"எங்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களில் 80% பேர் லஞ்சமே வாங்க முடியாது; ஏனென்றால் அவர்களுக்கும் பொது மக்களுக்கும் நேரடியாக எந்தவித தொடர்பும் இல்லை! இப்படிப்பட்ட ஒரு நிலையில் நாங்கள் ஒரே இடத்தில் பல ஆண்டுக்காலம் பணிபுரிந்தால் என்ன சுயநலதன்னோக்கு உருவாகி விட முடியும்?

"ஏற்கனவே வாரியம் வருடம் ஒன்றுக்கு சுமார் 250 கோடி நஷ்டத்தில் ஓடுகிறது! இதைப் போன்ற வேண்டாத மாற்றல் களால் அதற்கு இன்னும் அதிகமான பணவிரயம் தேவைதானா சார்?"

அவர்கள் பேசிக் கொண்டே போனார்கள்! இடைமறித்து நான் கேட்டேன்:

"இந்த மாற்றல்களை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தீர்களே! அங்கும் விசாரிக்கப்பட்டு உங்கள் பக்கம் நியாயம் இல்லை என்று தானே தீர்ப்பு வழங்கப்பட்டது?"

FREE E- BOOKS , www.thamizham.net.,



அவர்களில் ஒருவர் சொன்னார்:

"நீதிபதிகளை வேலை மாற்றம் செய்வதை, திரு. சந்திரசூட் அவர்களே எதிர்க்கிறார்! ஆனால் எங்களை டிரான்ஸ்பர் செய்தது சரி என்று தீர்ப்பு கொடுக்கிறார்கள்! கணவனுக்கும், மனைவிக்கும் ஒரே ஊரில் வேலை கொடுக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை என்றெல்லாம் தீர்ப்பு கொடுக்கிறார்கள்! என்ன நியாயம் இதெல்லாம்?"

"சரி இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

"எங்கள் வாரியத் தலைவரிடமிருந்து நியாயம் கிடைக்கவில்லை! நீதி மன்றங்களிலிருந்தும் நீதி கிடைக்கவில்லை! இப்போது முதல்வருக்கும், மின் துறை, தொழிலாளர் துறை அமைச்சர்களுக்கும் மனு செய்துள்ளோம்! அங்காவது நியாயம் கிடைக்கிறதா என்று பார்ப்போம்!"

"டிரான்ஸ்பர் விஷயத்தைத் தவிர வேறு எந்த வகையில் திரு விஜயராகவன் அவர்கள் தொழிலாளர் விரோதப் போக்கைக் கடைபிடிக்கிறார்?"

"1983—ஆம் ஆண்டிலேயே எங்கள் சம்பளங்கள் திருத்தி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்! இன்னும் அதைப் பற்றி பேச்சு, மூச்சே இல்லை! தொழிற்சங்கத்திற்கு நிதி திரட்டிய சங்க பொறுப்பாளர் மீதும், நிதி திரட்ட அனுமதி அளித்த பொதுச் செயலாளர் மீதும் கிரிமின குற்ற வழக்குகளைத்

FREE E- BOOKS , www.thamizham.net.,

தொடரச் செய்து அவர்கள் கைது செய்யப்படவும் காரணமாக இருந்தார்! சிறு சிறு தவறுகளை இழைத்தாலும் ஒழுங்கு நடவடிக்கைகள் என்ற பெயரில் கடுமையான தண்டனைகள் வழங்கி தொழிலாளர் உள்ளங்களில் செம்மையாக, பணியாற்றும் ஆர்வத்தை மங்கி அழியச் செய்தார்! இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பதைப் போன்று எங்கள் சங்கத்தின் செயலாளரை வேலை நீக்கம் செய்துள்ளார்! எனவே நாங்கள் கறுப்புச்சட்டை அணிந்து துக்கம் அனுசரித்துக் கொண்டிருக்கிறோம்.''


இவைகளையெல்லாம் கேள்விப்படும்போது, திரு விஜய ராகவன் அவர்களுக்கு எதிராக அவர்கள் உள்ளங்களில் எழுந்துள்ள வெறுப்புணர்ச்சி நியாயம் என்றே படுகிறது!

திரு விஜயராகவன் அவர்களைச் சந்தித்து இதைப் பற்றி கேட்டதற்கு 'ஐம்பத்திரெண்டு லட்சம் மின் உபயோகிப் பாளர்கள் முக்கியமா அல்லது ஒரு சில தொழிலாளர்களின் சுயநலம் முக்கியமா' என்று திருப்பிக் கேட்கிறார்! 'டிரான்ஸ்பர்களால் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே' என்று கேட்டால், 'அது தவிர்க்க இயலாதது' என்று சொல்லுகிறார்! 'நீங்கள் தொழிலாளர் விரோதப் போக்கை கடைபிடிக்கிறீர்கள் என்று தொழிற்சங்கங்கள் சொல்லுகின்றனவே' என்று கேட்டால் 'பாதிக்கப்பட்டவர்கள் அப்படித்தான் பழி சுமத்துவார்கள்' என்று சொல்லுகிறார்!

இந்த இரண்டு பக்கங்களில் உள்ள வாத, பிரதிவாதங் களைக் கேட்டு அறிந்த போது, இரு பக்கத்தினரும் ஒருவரை யொருவர் நம்பாத, சந்திக்க முடியாத, துர்பாக்கியமான ஒரு எல்லைக்குச் சென்று விட்டதாக உணருகிறோம்! தன் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களைத் தன்னுடைய அன்புக் குழந்தைகள் போன்று நடத்தாத ஒரு நிறுவனத் தலைவரும், தங்களுக்கு மேலேயுள்ளவர் தங்களை எல்லாம் கசக்கிப் பிழிந்து, துன்புறுத்த விரும்பும் ஒரு saddist என்று நினைக்கும் தொழிலாளர்களுமாக சேர்ந்து, ஒரு நிறுவனத்தை உயர்த்தி, மக்களுக்குச் சிறப்பாக கடமையாற்ற இயலாது!

— சீதா. செந்தாமரைக்கண்ணன்

FREE E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,

## தட்டாமல் வரும்

# கட்டுப்பாடு



சமீபத்தில் ஊட்டி சென்றிருந்தேன்! முந்தின நாள் இரவு 12 மணி வரை வேலை செய்ததால் காலை 8 அரை மணி வரை அயர்ந்து தூங்கி விட்டேன். எழுந்து, குளிப்பதற்கு கெய்சரைப் போட்டால் விளக்கு எரியவில்லை! அறைப் பையனைக் கூப்பிட்டு கேட்டால் தினமும் 8 மணியிலிருந்து 12 மணி வரை 'பவர் கட்' என்றான்! தண்ணீரில் கையை வைக்கவே முடியவில்லை! 12 மணி வரை காத்திருந்தேன்! 12 மணிக்கு விளக்குகள் எரிந்த போது ஆவலாக கெய்சர் போட்டால் மீண்டும் கெய்சர் விளக்கு எரியவில்லை! கூப்பிட்டு கேட்டால் 'இரண்டு பேஸ் மட்டுமே கொடுத்திருக்கிறார்கள்; இதில் கெய்சர் வேலை செய்யாது' என்றான்! அந்த நாள் குளியாத நாளாய்க் கழிந்தது! அதன் பிறகு மதுரை, திருச்சி ஆகிய ஊர்களுக்குப் போயிருந்தேன்! அங்கும் இதே நிலை தான்! ஆனால் ஒரு வித்தியாசம் குளிக்க முடிந்தது — வியர்வையிலும் கூட!

கிராமத்திலிருந்து சென்ற வாரம் தம்பி வந்திருந்தான்! பம்பு செட்டுகளுக்கு 6 மணி நேரம் தான் மின்சாரமாம்! அது கூட சில சமயங்களில் குறைந்து விடுகிறதாம்! ஆகையால் விவசாயிகள் வாடிய பயிரைக் கண்டு வாடுகிறார்கள் என்றான்! 'கவலை ஓட்டி பயிற்செய்தபோதே கவலையில்லாமல் இருந்தோம்' என்று பலரும் வருத்தப்படுகிறார்களாம்!

ஆனால் 9.3.85 இந்தியன் எக்ஸ்பிரஸின் கடைசி பக்கத்தில் ஒரு கட்டமிடப்பட்ட செய்தி! மறுநாள் நடைபெறப் போகும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை டி.வி.யில் காண்பதற்கு வசதியாய், திருச்சியில், ஆட்டம் நடக்கும் நேரங்களில் மின்சாரம் இருக்குமாறு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள்! குடல் கூழுக்கு அழுகிறதாம் கொண்டை பூவுக்கு அழுகிறதாம்!

FREE E- BOOKS , www.thamizham.net.,

31.3.81 அன்று எடுத்த கணக்கின்படி ஒரு மனிதனுக்கு ஓராண்டில் மின்சாரம் கொடுக்கிறது என்ற விவரம் (யூனிட்டுகளில்)

| ஆசியா | | ஐரோப்பா | | வேறு நாடுகள் | |
|---|---|---|---|---|---|
| பங்களா தேஷ் | 33 | | | | |
| பர்மா | 41 | | | | |
| சீனா | 313 | பிரான்ஸ் | 5148 | | |
| ஜப்பான் | 5338 | மேற்கு ஜெர்மனி | 6121 | கனடா | 14.198 |
| இந்தியா | 135 | கிழக்கு ஜெர்மனி | 6097 | ஆஸ்திரேலியா | 6.907 |
| இஸ்ரேல் | 4656 | இத்தாலி | 3245 | அமெரிக்கா | 10.438 |
| கொரியா | 1158 | நெதர்லாந்து | 3303 | ரஷ்யா | 4.880 |
| பாகிஸ்தான் | 190 | ஸ்வீடன் | 12122 | | |
| பிலிப்பைன்ஸ் | 204 | ஸ்விட்சர்லாந்து | 6278 | | |
| சிங்கப்பூர் | 3048 | துருக்கி | 548 | | |
| தாய்லாந்து | 347 | இங்கிலாந்து | 4974 | | |

சென்னையில் மின்சார தட்டுப்பாட்டால், பல கம்பெனிகள் லே—ஆப் செய்யப்பட்டு, பல தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள்! இனிமேல், இதைப் போன்ற கம்பெனிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களில் யாருக்கேனும் கடவுள் நம்பிக்கை இருந்தால் அவர்கள், வேண்டிக் கொள்ள வேண்டியது: 'கடவுளே எங்களுக்கு இந்த கோடை மாதங்களில் பசியாத நல்வயிறைத் தந்தருளு!'

மதுரையில் குடிநீர் சப்ளை செய்யவும், மருத்துவ மனைகளில் அவசர ஆபரேஷன்கள் செய்யவும் மின்சாரம் இல்லையாம்! ஆனால் எல்லா சினிமா கொட்டகைகளிலும் அரங்கு நிறைந்த நான்கு காட்சிகள்! 'ஏசி போடாததால் புழுக்கம் பொறுக்க முடியவில்லை' — அலுத்துக் கொள்ளுகிறார்கள் சில அன்பர்கள் — வாழிய பாரத மணித்திரு நாடு!

மீதி நாடுகளில் ஒரு மனிதனுக்கு எவ்வளவு மின்சாரம் தரப்படுகிறது என்று ஒப்பிட்டு பார்த்தால், இந்தியா மூன்றாவதாக வருகிறது! மேலேயிருந்து என்று நினைத்து விடாதீர்கள்! கீழேயிருந்து! பங்களா தேஷும், பர்மாவும் தான் நம்மை விட குறைவான மின்சாரம் சப்ளை செய்யும் நாடுகள்! மீதி எல்லா நாடுகளும் நமக்கு மேலே! பாகிஸ்தான் கூட ஒருவனுக்கு ஒரு வருடத்திற்கு 190 யூனிட்டுகள் தருகிறது! இந்தியாவில் 135 யூனிட்டுகள் தாம்! சுதந்திரம் இரவில் வாங்கினோம்! இன்னும் விடியவேயில்லை!

— சேதா. செந்தாமரைக் கண்ணன்

FREE E- BOOKS , www.thamizham.net.,



ஆஸ்துமா நோயாளிக்கான சுவாசக் கருவி

வறுமையின் கோரப்பிடியில்

# இன்னொரு ஜி.டி.நாயுடு

தம்புசாமி ஜோசப் டேவிட் ஒரு படிக்காத மேதை. இந்தியத் தலைநகரின் ஒரு மூலையில் ஒடுக்கப்பட்டுள்ள இவர் இருபதுக்கும் மேற்பட்ட எளிய அன்றாடத் தேவைக்கேற்ற விஞ்ஞானக் கருவிகளைக் கண்டுபிடித்துள்ளார். ஓடாமின்றி இயங்கும் நெசவுத்தறி, இரட்டை இழை மின்விளக்கு, ஆஸ்த்துமா நோயாளிகளுக்கான சுவாசக் கருவி போன்ற இவரது சில கண்டுபிடிப்புகள் விஞ்ஞான வல்லுநர்களையே வியக்க வைத்துள்ளன. 7வது வகுப்பைத் தாண்டாத இவரது சமீபத்திய கண்டுபிடிப்பு 'ஸ்டெபோமீட்டர்". ஒருவரது நடையின் வேகத்தையும் நேரத்தையும் அளக்கும் இக்கருவி அன்றாடம் பயன்படக் கூடியது மட்டுமின்றி சிறந்த வியாபாரப் பொருளும் கூட. இக்கருவி நர்சரி பள்ளியொன்றிற்கு ரூ. 150/—க்கு விற்கப்பட்டு நன்கு இயங்கி வருகிறது.

வயதான தாயார், மூளைக் கோளாறுடைய சகோதரர், மனைவி, மூன்று குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தின் தலைவனான இம்மேதை வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கின்றார். கடந்த 17 ஆண்டுகளாக விஞ்ஞான தாகம், வறுமை இவற்றுடன் இடைவிடாத போராட்டம் நடத்தி வந்த போதும் இவர் தன் மீதும் தன் நாட்டின் மீதும் நம்பிக்கை இழக்கவில்லை. நண்பர்களிடம் பொருள் திரட்டியே 'கிட்காட் ப்யூஸ்' எனப்படும் நவீனக் கருவியொன்றை ரூ.35,000 செலவில் தயாரித்துள்ளார்.

'விஞ்ஞானிகளுக்கு இந்நாட்டில் மதிப்பில்லை' என்று வருந்தும் இவர் '200 அங்கத்தினர்களை மட்டுமே கொண்ட இந்திய ஆய்வுக் கழகம் ஆய்வாளர்களுக்குப் பொருளுதவி அளிப்பதில் அளவு கடந்த தாமதமே காட்டுகிறது' என்கிறார். பல்லாண்டுகளாகத் தன்னுடன் தொடர்பு கொண்டுள்ள இம்மேதைக்கு இக்கழகம் இதுவரை அளித்துள்ள பொருளுதவி ரூ.5,000/— மட்டுமே.

வேலையின்றி டில்லி நகர வீதிகளில் சுற்றிய இவர் வீட்டு வேலைக்காரனாக கார், குளிர் சாதன மெக்கானிக்காகவும் →



FREE E- BOOKS , www.thamizham.net.,

பணிபுரிந்துள்ளார். 1977ல் மகாராஷ்டிரத்தில் சிக்கனமும் திறன் வாய்ந்ததுமான பெட்ரோல் பம்பு ஒன்றை வடிவமைத்து அதற்காக ரூ. 1300/— பெற்றுள்ளார். பம்பாயில் மின் பளு தூக்கிக்குப் பதிலாக டீசலினல் இயங்கும் பளுதூக்கியை வடிவமைத்துக் கொடுத்திருக்கிறுர்.

இவரது விஞ்ஞான அறிவைக் கண்டு வியந்து கென்யா நாட்டு நிறுவனம் ஒன்றும் நெதர்லாந்து நாட்டுத் தூதரகமும் இவரைத் தம்மிடம் பணிபுரிய அழைப்பு விடுத்தன. தமது விஞ்ஞான அறிவினல் வெளிநாட்டவர்கள் பயனடைவதை விரும்பாத இவர் அவ்வழைப்புகளை நிராகரித்து விட்டார்.

இன்று தனது கடந்த காலத்தை அசை போட்டுப் பார்க்கும் இவர் இதுபற்றி வருந்துகிறுர். 'இனியும் ஆய்வுக் கழகத்தின் உதவி எனக்குக்கிட்டாவிடில் இந்தியாவை விட்டு வெளியேறி விடுவேன்' என்று திடமாகக் கூறுகிறார்.



இரட்டை இழை மின் விளக்கு

வெளிநாடுகளுக்கு மேற்படிப்புக்காகச் செல்லும் நமது விஞ்ஞான மாணவர்கள் பெரும்பாலும் தாய்நாட்டுக்கு வரத் தயங்குவதன் காரணம் இப்போது புரிகிறது.

— நிலா

FREE E- BOOKS , www.thamizham.net.,

பரிசுக் கதை

# சரியான தண்டனை

முதலிரவு —

அன்று காலையில் தாலி கட்டி, தன் மனைவியாக்கிக் கொண்ட ராதாவின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான் சந்திரன்.

மணவறையின் அலங்காரமும் அங்கு தொங்க விடப்பட்டிருந்த பூக்களின் நறுமணமும் சேர்ந்து சந்திரனின் உடம்பில் ஓர் இன்பக் கிளர்ச்சியை ஏற்படுத்தின.

தாலி கட்டும் வேளையில் தான் கண்ட கோல மயில் ராதாவின் கொள்ளை அழகைப் பருக ஆவலோடு இருந்தான், சந்திரன்.

ஒரு கணம் — ராதாவின் அழகிய முகம் அவன் மனக் கண் முன்னால் தோன்றி மறைந்தது.

கடைசியாக, ராதா அவ்வறையினுள் நுழைந்தாள். அவள் வந்து நின்ற அழகைக் கண்டு, ஒரு கணம் தன்னையே மறந்து விட்டான், சந்திரன். அவன் இமைகள் இமைக்க மறுத்தன.

"ரொம்ப நேரம் காக்க வைத்து விட்டேனா...?" ராதாவே முதலில் பேச்சை ஆரம்பித்தாள்.

திடீரென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு, "சே... சே...! உன்னைப் போன்ற அழகியை, மனைவியாக அடைய, நான் இவ்வளவு நாட்கள் காத்திருந்ததை விட.... இது ரொம்ப சாதாரணம்!" என்றான் சந்திரன்.

"தாலி கட்டும் வேளையில் இரண்டு பவுன் நகைக் குறைவுக்காகத் தாலி கட்ட மாட்டேன் என்று அடம் பிடித்தீர்களே...?"

"அது தான் அப்பவே முடிஞ்சு... உனக்கு நான் தாலியும் கட்டி விட்டேனே, ராதா! இந்த நேரத்தில் அதெல்லாம் எதற்கு?"

தான் அணிந்திருந்த நகைகளையெல்லாம் கழற்றத் தொடங்கினாள், ராதா. படுப்பதற்கு இடையூறாக இருக்கும் என்று எல்லாவற்றையும் கழற்றுகிறாள் போலிருக்கிறது என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு, அவள் அழகைத் தன் கண்களால் பருகிக் கொண்டிருந்தான், சந்திரன்.

"தராசு கொண்டு வந்திருக்கிறீர்களா...?"

"இப்ப எதுக்கு ராதா, தராசு எல்லாம்...?"

"நீங்கள் கேட்ட அளவு நகை இருக்கிறதா என்று எடை போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்!"

"ராதா! நீ என்ன சொல்கிறாய்?"

"மிஸ்டர் சந்திரன்! கேவலம் இரண்டு பவுன் நகைக் குறைவுக்காக, எனக்கு தாலி கட்ட மாட்டேன் என்று காலையில் சண்டைப் போட்டீர்கள்... நீங்கள் கேட்ட நகையெல்லாம் கட்டிலில் போட்டிருக்கிறேன். அவற்றை அன்போடு கட்டித் தழுவி... அரவணைத்து... அதற்கு முத்தம் கொடுத்து... அவற்றோடு குடும்பம் நடத்துங்கள். பொன்னாசைப் பிடித்த உங்களை போன்றவர்களுக்கு, பெண்ணாசை கூடாது! குட் பை!" என்று உறுதியாகச் சொல்லி விட்டு, அந்த அறையை விட்டு வெளியேறினாள், ராதா! தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட கைதி மாதிரி என்ன செய்வதென்று தெரியாமல் முழித்தான் சந்திரன்.

●●●

— குளச்சல் இப்ராஹிம்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஆஸ்துமாதானே!

இனி கவலையே வேண்டாம்

ஆஸ்துமா, ஈஸ்னோபீலியா மற்றும் மிக மிகப் பெரிய எவ்வகை நோயாளிகளும் வியக்கத்தக்க வகையில் சுகமடைய இலவச கடித ஆலோசனை பெறலாம். முகவரி: ஞானோதய வைத்தியர் டாக்டர் சி.கே. மாணிக்க வாசகம், செலந்தம் பள்ளி (போஸ்ட்) திருப்பத்தூர் தாலுக்கா (வ.ஆ. மாவட்டம்) பின் — 635 653

முகாம் விவரம் (வைத்தியரை நேரில் சந்திக்க!)

திருப்பத்தூரில் சந்திக்க நாள்: பிரதி திங்கட்கிழமை — பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை; இடம்: 70—சி. ஆலங்காயம் ரோட் (மாடியில்) (கற்பகம் சூப்பர் மார்க்கட் எதிரில்) போன்: 469 அல்லது 226 பி.பி.

சென்னையில் சந்திக்க நாள்: பிரதி சனி, ஞாயிறு மட்டும் — காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை; இடம்: மீனாட்சி கல்யாண மண்டபம் (அபிராமி தியேட்டர் அருகில்) 186, புரசைவாக்கம் ஹைரோட், போன்: 666430.

பெங்களூரில் சந்திக்க நாள்: பிரதி மாதம் — முதல் புதன் கிழமை மட்டும்; நேரம் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை; இடம்: ஹோட்டல் பிராட்வே, கெம்பே கவுடா ரோட், (கல்பனா தியேட்டர் அருகில்) போன்: 72321.

கோயமுத்தூரில் சந்திக்க நாள்: பிரதி மாதம் — மூன்றாவது புதன் கிழமை மட்டும்; நேரம் காலை 9 மணி முதல் 12 மணி வரை; இடம்: சேரன் பேலஸ் லாட்ஜிங் — கோவை-18 (சாந்தி தியேட்டர் பின்புறம்) போன்: 30265.

வேலூரில் சந்திக்க நாள்: பிரதி மாதம் கடைசி புதன் கிழமை மட்டும்; நேரம்: மாலை 2 மணி முதல் 6 மணி வரை; இடம்: வசந்த விஹார் லாட்ஜ், ஆபீசர் லைன், வேலூர் (வ.ஆ.) போன்: 21496.


FREE E- BOOKS , www.thamizham.net.;

## புற்றுநோய் — கேள்வி பதில்

★ **புற்றுநோய் யார் யாருக்கு வரும்?**

புற்றுநோய் யாருக்கும் வரலாம். ஆனால் பொதுவாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே வருகிறது. அதிலும் புகையிலை, பீடி, சிகரெட் தொடர்பு உள்ளவர்களுக்கே பெரும்பாலும் வருகிறது. இந்தியாவில் எட்டுப்பேரில் ஒருவருக்குப் புற்றுநோய் வருகிறதாம். சென்ற ஆண்டு கணக்கெடுப்பின்படி நம்நாட்டில் 12 லட்சம் பேருக்குப் புற்றுநோய் இருந்தது.

★ **புற்றுநோய் பரம்பரை வியாதியா?**

இல்லை என்பதற்கில்லை. தாய் தந்தையர் இருவருக்குமே புற்றுநோய் இருக்குமானால் அவர்களுடைய குழந்தைகளுக்குப் புற்றுநோய் வரும்வாய்ப்பு அதிகம்.

★ **புற்றுநோயிலிருந்து தப்புவது எப்படி?**

இப்படிச் செய்தால் தப்பலாம்.

1. கட்டி 49 இல் கூறிய ஆறு அடையாளங்களில் ஒன்று காணப்பட்டாலும் உடனே மருத்துவரை அணுகுக.

2. ஆண்டுக்கொரு முறை முழு மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுங்கள். பம்பாயிலுள்ள டாடா புற்றுநோய் மருத்துவ மனையில் இலவசமாகப் புற்றுநோய் பரிசோதனை செய்து கொள்ளலாம் என்று அம்மருத்துவமனைத் தலைவர் டாக்டர் ஜ ரஸ்ஸாவாலா அறிக்கை விடுத்துள்ளார்.

3. 35 வயதுக்கு மேற்பட்ட பெண்டிர் ஆண்டுக்கு இருமுறை மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். புற்றுநோய்ச் சின்னங்கள் தென்பட்டால் உடனே வைத்தியம் செய்து கொள்ளவும்; ஆரம்ப நிலையில் இதை நிச்சயம் ஒழித்துவிட முடியும்.

4. புகையிலை, புகை பிடித்தல், மதுபானங்கள் அருந்தல் — இவற்றை அறவே துறப்பதோடு புலால்உணவையும் நீக்கிக் காய்கறி உணவு முறையைக் கடைப்பிடிப்பவர்களுக்கு இந்நோய் வரும் வாய்ப்பு குறையும்.

— கட்டி பாரதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# பாரி நிலைய வழி

## கிடைக்கப் பெறும்

டாக்டர் திருமதி மற்றும் திரு அறவாணன் தம்பதியரின்

ஆராய்ச்சி நூல்கள்

தமிழரின் தாயகம்
மர வழிபாடு
பாம்பு வழிபாடு
பல்லாங்குழி
செங்கோர்
கல்வித்துறை உருப்பட
அற்றைநாட் காதலும் வீரமும்
எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்
கவிதையின் உயிர் உள்ளம் உடல்

**Dravidians and Africans**
**Anthropological Studies on the Dravido Africans**
**Research Papers on Tamilology**

முதலான முப்பந்தைந்து நூல்களும், அறிஞர் மு.வ., பாரதிதாசன், சோமலெ இன்ன பிற எல்லா அறிஞர்களின் நூல்களும் கிடைக்குமிடம்:

**பாரி நிலையம்**
**189. பிரகாசம் சாலை**
**சென்னை 600 108**


FREE E- BOOKS , www.thamizham.net.,

# வரலாறு காணா குழந்தை



இந்தியாவிற்கு இன்னொரு பெருமை தேடித் தந்துள்ளார் இந்திய டாக்டர் மச்சோடா. 1982 மே மாதம் 24 ஆம் தேதி டிரான்ஸ்கேய் என்னும் ஆப்பிரிக்க நாட்டில் திருமதி கிறிஸ்டியன் சமானே என்பவருக்கு சிசேரியன் அறுவை சிகிச்சை செய்து மனித வரலாற்றிலேயே பிரமாண்டமான குழந்தையை அதாவது 10.2 கிலோ எடையும் 69 செ.மீ உயரமும் உள்ள பூதாகரமான குழந்தையை எவ்வித சிக்கலுமின்றி வெளிவர உதவியுள்ளார். 1984 கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இச்சாதனை குறிப்பிடப்பட்டுள்ளது. 'சித்தாண்டைவ்' என அழைக்கப்படும் இக்குழந்தை பிறந்த இரண்டாம் தினத்திலேயே தாய்ப்பால் பற்றுக்குறையினால் 500 கிராம் புட்டிப்பால் அருந்தியது. ஒரு வயதில் 500 கிராம் புட்டிப்பால், 500 கி தானிய உணவு, காய்கறி மாமிசம் முதலியன உண்ணத் தொடங்கிவிட்டது. காவலராக வேலை பார்க்கும் இவள் தந்தைக்கு குழந்தை உணவுச் செலவு கட்டுபடியாகாததால் சேவை நிறுவனங்கள் இக்குழந்தையைப் பராமரிக்கின்றன. தாயின் பிட்யூட்டரி சுரப்பியில் ஏற்படும் சீர்கேடு குழந்தையின் இராட்சசத் தன்மைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. பரிசோதனைகளின் மூலம் சாதாரணக் குழந்தையை விட அறிவுக்கூர்மை அதிகம் என்றும் 13, 14 வயதில் 9 அடி உயரம் வளர்ந்துவிடும் என்றும் வேறு உடற்கூறு கோளாறு இல்லையென்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

— "கார்த்திக்"

FREE E- BOOKS , www.thamizham.net.,

புதிய தொடர்

# அண்ணா என்கிற மனிதர்



கடந்த கால் நூற்றாண்டாக, தமிழ் நாட்டில் எந்தக் கடவுளின் பெயரை விடவும், அதிகமாக உச்சரிக்கப்பட்ட பெயர் "அண்ணா". எங்கும் எதிலும் தமிழ் வராவிட்டாலும், எங்கும் எதிலும் அண்ணா என்கிற பெயர் ஆரவார இரைச்சலுடன் காணக் கிடக்கிறது. தெருவெல்லாம் அண்ணாதுரை முழக்கம் செழிக்கிறது! தெரு மட்டுமல்ல சந்து, சிறு சந்து, தொடங்கி சாலை, குடியிருப்பு, மாவட்டம் வரை அண்ணாவாகியிருக்கிறது.

அண்ணாவின் பெயரைக் கேட்டு கேட்டுப் புளித்துப் போன ஒரு சாரார் அலுத்து நிற்பது ஒரு புறமிருக்க, இன்னமும் அண்ணாவை ஒரு யுகம், ஒரு சரித்திரம், ஓர் உலகத் தலைவர் என்று வழிபாட்டு அடைமொழிகள் கொடுத்து பூஜிப்பவர்களும் இருக்கிறார்கள்.

உண்மையில் இந்தப் புகழ் சாம்ராஜியத்தின் மூலக்கரு என்ன? இந்தப் புகழ் நிஜமானதா? அல்லது அரசியல் லாபங்களுக்காக பூதாகரமாக வளர்த்து விடப்பட்ட நீர்க் குமிழியா?

ஆரவாரங்களும், அரசியல் தேவைகளும் ஓய்ந்த பின்னர் வரப்போகும் காலம் அண்ணாவை சரியான இடத்தில் நிறுத்தி எடை போடும் · அப்போது வரலாற்றின் வடிகட்டிகளையும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

தாண்டி இந்த அண்ணா என்கிற நாமம் இப்போது போல் நீடிக்குமா?

ஆனால் அதுவரை நாம் காத்திருக்க முடியாது. காரணம் அண்ணாவின் பாதிப்புகளும், அவர் வளர்த்து விட்டவர்களும், வளர்த்து விட்டவைகளும் இந்த மண்ணின் நிகழ் காலத்தை ஆட்டிப் படைத்து வருகின்றனர். அது இந்த மண்ணின் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமாக இல்லை.

எனவே அண்ணாவைச் சரியாக விமர்சித்து, வைக்க வேண்டிய இடத்தில் நாம் அவரை வைப்பது இன்றைய தேவையாகிறது. இந்த அடிப்படையில் அண்ணா என்கிற மனிதர் கட்டியின் பக்கங்களில் தொடர்ந்து விமர்சிக்கப் படுகிறார்.

அண்ணாவைக் கதாநாயகனாக்கிப் புகழ்பவர்கள் அல்லது அடிமட்டத்தில் காறித்துப்புபவர்கள் மட்டுமே அண்ணாவைப் பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள். இவை இரண்டிலும் உண்மை மறைந்திருக்கவே முடியும்.

இவை இரண்டுமன்றி "அண்ணா"வின் வளர்ச்சியைப் பார்க்காமல் கண்களை மூடிக் கொண்டு ஒதுங்கும் ஒரு கூட்டமுமுண்டு. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அண்ணா இப்போது தவிர்க்க முடியாதவர். அண்ணாவின் பங்கை, பாதிப்பை இந்த நாட்டு அரசியல் சமூக வரலாற்றில் என்றும் மூடி மறைக்கவே முடியாது என்று உணராதவர்கள், உணராதவர்களே!

இந்த உண்மைகளையெல்லாம் நெஞ்சார உணர்ந்து கொண்டு அண்ணாவை பல்வேறு கோணங்களிலிருந்து — ஓர் அரசியல்வாதியாக, சமூக சீர்திருத்தவாதியாக, பேச்சாளராக, எழுத்தாளராக, ஒரு மனிதராக நாம் மறுபரிசீலனை செய்வது — சரியான பாரபட்சமற்ற கண்ணோட்டத்துடன் செய்வது — அண்ணாவைப் பற்றிய சரியான பார்வையைத் தரக்கூடும்.

முதலில் அண்ணாவின் வரலாற்றைச் சுருக்கமாக நினைவு படுத்தி கொள்வோமா? சி.என். அண்ணாதுரை என்ற

FREE E- BOOKS , www.thamizham.net.,



பெயரில் உள்ள சி.என். என்ற ஆங்கில எழுத்துக்கள் காஞ்சிபுரம் நடராசன் என்பதை மட்டுமல்ல அவரது ஆங்கிலமோகத்தையும் கூடக் குறிக்கும். அண்ணாதுரையின் தந்தையார் நடராசன், நெசவாளர் குடியினர்; தாயார் பங்காரு அம்மையார்;

27 வயதுடைய பாரதியார் புதுச்சேரியிலிருந்து "இந்தியா" பத்திரிகையை வெளியிட்டு தமிழர்களைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்த காலக் கட்டத்தில், 15—9—1909 இல் காஞ்சிபுரத்தில் கடவுள் பற்றுமிக்க எளிய குடும்பத்தில் அண்ணாதுரை பிறந்தார். 30 வயதுடைய பெரியார் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிர ஈடுபாடு காட்டத் துவங்கியிருந்த காலம் அது.

அவரது உயர்நிலைக் கல்வி முழுவதும் காஞ்சியிலேயே முடிந்தது. பள்ளியில் படிக்கும் நாட்களிலேயே நிறைய பொது நூல்களைப் படிக்கும் ஆர்வம் அவருக்கு இருந்திருக்கிறது. வகுப்பிலே முதல் மாணாக்கராய் இருந்த அண்ணா, பள்ளி இறுதி வகுப்பை நெருங்கும் போது பல திசை திருப்பங்களுக்கு உள்ளாகியிருக்க வேண்டும்.

பள்ளியிறுதி வகுப்பில் அவர் இருமுறை தோல்வியடைந்து மூன்றாம் முறையே தேறியதற்கு, அப்போதே அவருக்குத் தொடங்கிவிட்ட அரசியல் ஈடுபாடும் ஒரு காரணம் தான்.


தனது பள்ளி நாட்களிலேயே பெரியாரின் மேல் அண்ணாவிற்கு ஈடுபாடு ஏற்பட்டிருக்கிறது. பெரியார் காங்கிரஸ் இயக்கத்தை விட்டு வெளியேறியதும், பிராமணர் அல்லாதவர் மாநாடு கூட்டியதும் காஞ்சியில் தான் என்பது கூட, அண்ணாவின் இந்த நெருக்க சூழலுக்குக் காரணமாயிருக்கலாம்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

பள்ளிப்படிப்பை முடித்தது, தனது குடும்பத்தின் வறுமை
காரணமாக அவர் விரும்பியபடி கல்லூரியில் சேர முடியவில்லை. குடும்பத்தைத் திருப்தி செய்ய காஞ்சிபுரம் நகராட்சி மன்றத்தில் எழுத்தராக பணி புரிந்தார்.

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்புக்குச் சம்பளச் சலுகை வழங்குவதென ஆங்கில அரசு அப்போது ஓர் அறிவிப்பு செய்தது. பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த அண்ணா வேலையை உதறி விட்டு அந்த சலுகையைப் பயன்படுத்தி சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார்.

1930 இல் அவர் கல்லூரியில் படிக்கும் போதே அவருக்கும் ராணி அம்மையாருக்கும் வைதீக முறைப்படி திருமணம் நடைபெற்றது. அண்ணாதுரை முதலியார் என்று பெயரிடப் பட்ட மணமகனாகவே அவரது திருமண அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்.



திருமணப் பத்திரிகை.

(10-9-30)

1—9—30

C.

Retired Drawing Master Pachiap's Secondary School,

Conjeevaram.

With the best compliments of —

C. A. Nataraja Mudaliar

C. G. Ragupathi, L. F. Department, Satiyavadu.

FREE E- BOOKS , www.thamizham.net.,

'சுட்டி'யின் இலக்கிய பணி தொடர எமது
வாழ்த்துக்கள்

தேவகோட்டை பி. நாராயணன்
பாரதியாரின் சுவையான அனுபவங்கள் — 7.00
சிந்தனை விருந்து 1000 — 12.00

பட்டுக்கோட்டை என்.வி.கே. சாமி
பொது அறிவுக் களஞ்சியம் — 7.00

ர. சண்முகம்
கோழி வளர்ப்பு — 11.00

எஸ். சத்திய மூர்த்தி. ஐ.ஏ.ஏ.எஸ்
மூன்று நாடுகளில் முன்னூறு நாட்கள் —— 11.00

கவிஞர் வேதம்
எளிய யோகாசன முறைகள் — 13.00

விரிவான விலைப்பட்டியலுக்கு எழுதுக. பதிவுத் தபால் மூலம் பெற ரூ.3.00 சேர்த்து எம்.ஓ. செய்யவும். வி.பி.பி.யில் பெற கார்டு எழுதவும்

"புத்தகப் பூங்கா"

29, நல்லண முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை — 600 014.

FREE E- BOOKS , www.thamizham.net.,

கல்லூரி முதல்வரின் பொருளாதார உதவியுடன் தான் 1934 இல் அண்ணாவால் பி.ஏ. ஆனர்சு படிப்பை முடிக்க முடிந்தது. இக்கல்லூரி நாட்களிலேயே சென்னையில் சில பேச்சு அரங்கங்களில் அண்ணா கலந்து கொண்டு, சிறந்த பேச்சாளருக்குரிய ஆற்றல்கள் தம்மிடம் இருப்பதை வெளிப்படுத்தத் துவங்கி விட்டார். நீதிக் கட்சியின் பால் அவருக்குக் கவர்ச்சி ஏற்பட்டு, படிப்பை முடித்ததும் பொது வாழ்வில் ஈடுபட அப்போதே முடிவு செய்தார்.

ஆனால் அவரது பெற்றோர்கள் அவர் வேலைக்குப் போவதைத் தான் வற்புறுத்தினார்கள். அவர்களை எதிர்த்து நிற்க விரும்பாத அண்ணா வேலை தேடினார். பள்ளி ஆசிரியர் வேலை தான் கிடைத்தது.

இந்நிலையில் 1935 இல் திருப்பூரில் செங்குந்த வாலிபர் மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு அண்ணாதுரையின் வாழ்வில் ஒரு திருப்புமுனை. காரணம் இங்கு தான் அவர் முதலில் பெரியாரை நேரில் சந்தித்தார்.

அந்த நாள் பற்றி அண்ணாவே குறிப்பிடுகிறார்: "அன்று முதல் அவர் என் தலைவரானார். நான் அவரின் சுவீகாரப் புத்திரனானேன் பொது வாழ்வில்"

1935 இல் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் நீதிக்கட்சி வேட்பாளராகவே (26 வயது) அண்ணா நிற்குமளவுக்கு, செல்வாக்கு பெற்றுவிட்டார். பொது மக்கள் மத்தியில் அவர் முதலில் சொற்பொழிவு நிகழ்த்திய காலமும் அது தான். ஆனால் அண்ணா தேர்தலில் தோற்றார்.

1937 இல் ராஜாஜி முதலமைச்சரானதும் தமிழ்ப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். தமிழர் மொழி, இனம் பற்றி பிரச்சாரம் செய்து வந்த பெரியாருக்கு இச்சூழல் அரியதொரு வாய்ப்பாகியது. தமிழ் நாட்டில் முதன் முதலில் இந்தி சொல்லிக் கொடுக்க முன்பு பள்ளி நடத்திய அதே பெரியார், இப்போது இந்தி எதிர்ப்புப் போராட்டம் துவங்கினார். பெரியார் தலைமையில் வெடித்த இந்த மாபெரும் தமிழகம் தழுவிய போராட்டத்திற்கு அண்ணா

FREE E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,

தளபதியானார். தமிழகம் முழுவதும் அண்ணாவின் பெயரை பாமரர்களும் அறிய காரணமான நிகழ்ச்சி இது தான்.

1938 இல் இந்தி எதிர்ப்புக்காக சிறை சென்ற பெரியாரை அவர் சிறையில் இருக்கும் போதே நீதிக்கட்சியினர் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். பெரியாரின் சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் ஒரே தலைமையின் கீழ் வந்தன. இந்தக் காலக் கட்டத்தில் பெரியாரின் கொள்கைகளைப் பட்டி தொட்டியெங்கும் பரப்பும் பணியில் அண்ணா முழுமையாக ஈடுபட்டார். 1942 இல் திராவிட நாடு இதழைத் தொடங்கி பெரியார் கொள்கைகளைத் தீவிரமாக எழுதி வந்தார்.

1944 இல் சேலத்தில் நடந்த மாநாட்டில் நீதிக் கட்சியின் பெயரே "திராவிடர் கழகம்" என மாற்றப்பட்டது. 1947, ஆகஸ்டு — 15 இல் சுதந்திர தினத்தைத் துக்க தினமாக பெரியார் அறிவித்ததை அண்ணா வெளிப்படையாக எதிர்த்தது தான் இருவருக்கும் காலப் போக்கில் ஏற்பட்டிருந்த விரிசலின் முதல் வெளிப்பாடு. பெரியாரின் சர்வாதிகார போக்கு, தன்னை என்றும் வளரவிடாது என்ற முடிவுக்கு அண்ணா வந்திருந்தார். இச்சூழலில் 1948 இல் தூத்துக்குடி தி.க மாநாட்டில் பெரியார் அறிவித்தார்: "வயது வந்த மூத்த மகன் இருக்கிறான். நல்ல அறிவாளி, அனுபவஸ்தன். நம்பிக்கைக்குப் பாத்திரமான வாரிசுவிடம் பெட்டிச் சாவியை ஒப்படைத்து விடுவது தான் சரி" இந்த வாரிசு அண்ணாதுரை தான் என்று அனைவரும் நம்பி மகிழ்ந்தனர்.

ஆனால் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சிக்குப் பின்னர் பெரியார் 1949 தொடக்கத்திலிருந்தே "கழகத்தில் ஒருவனையும் நம்ப முடியாது. என்னைக் கொல்ல சதி செய்கிறார்கள்" என்று பொது மேடையிலேயே பேச ஆரம்பித்தார்.

இதனை அடுத்து "எனது தள்ளாத வயதில் எனக்கு துணையாகவும் பெட்டிச்சாவியின் வாரிசாகவும் மணியம்மையை மனைவி ஆக்கிக் கொள்கிறேன்" என்று 72 வயது பெரியார் 28 வயது மணியம்மையை மணந்தார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

கழகத்தின் வாரிசு பதவியும் பெட்டியில் உள்ள 5 லட்சத்தையும் பறி கொடுத்த நிலையில் தான் அண்ணா 17.9.1949 இல் சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவங்கினார்.

தி.க.விலிருந்து தி.மு.க. எந்த விதத்திலும் கொள்கையில் மாறுபாடு கொண்டதல்ல என்று பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் 1952 இல் தி.மு.க. திராவிட நாடு பிரிவினையை ஆதரிப்போர்க்கு தேர்தலில் ஆதரவளிப்பதாக அறிவித்து மெதுவாக அரசியல்சுவையை நோக்கி நாக்கை நீட்டியது. 1957 இல் தி.க.வின் கொள்கைக்கு மாறாக தி.மு.க தேர்தலில் நின்று 15 இடங்களைப் பிடித்தது. 1962 தேர்தலுக்கு ஓராண்டு முன்பு திராவிட நாடு கொள்கையில் நம்பிக்கை தளர்ந்த ஈ.வெ.கி. சம்பத் கட்சி விலகினார். 1962 தேர்தலில் தி.மு.க நிறைய இடங்களைக் கைப்பற்றினாலும் அண்ணாதுரை தனது சொந்த ஊரிலேயே தோல்வியுற்றார்.


1965 — 26, ஜனவரியில், இந்தி ஆட்சி மொழி ஆகப் போகும் அறிவிப்பு தி.மு.க.விற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. முழு அளவில் தி.மு.க இந்த மொழிப் போரில் ஈடுபட்டு பொதுமக்கள் ஆதரவைப் பெற்றது. காங்கிரஸ் ஆட்சியில் ஏற்பட்ட ஊழலும், இந்தி எதிர்ப்புப் போராட்டமும் 1967 இல் தி.மு.க.வை அரியணையில் அமர்த்தின. அண்ணா முதல்வரானார். நாத்திகவாதம், பார்ப்பனர் எதிர்ப்பு, வடநாட்டு ஆதிக்க எதிர்ப்பு போன்ற உயிர்க்கொள்கைகளைத்தளரவிட்டே அண்ணாவும், தி.மு.க.வும் தமிழகத் தலைமைப் பதவியில் உட்கார முடிந்தது.

ஆட்சியேற்ற சுமார் இரு ஆண்டுகளிலேயே, 2-2—1969 இல் அண்ணாதுரை மறைந்தார். 60 ஆண்டுகள் வாழ்ந்த அண்ணா, சுமார் 35 ஆண்டுகளைப் பொது வாழ்வில் கழித்திருக்கிறார். அதில் 14 ஆண்டுகள் பெரியாருடன் கழித்திருக்கிறார்.

— எழில்

(அடுத்து: அண்ணா என்கிற மனிதரின் அரசியல் கொள்கை)

FREE E- BOOKS , www.thamizham.net.,




உபகாரத்தைத் தருபவருக்கும் பெறுபவருக்குமிடையே எஜமானர் - அடிமை நிலைதான் இருக்கும். ஆனால், உரிமையைத் தருவது - பெறுவது என்கிற இடத்திலே-யோ சமநிலை, சம அந்தஸ்து இருக்கும். ஆகவே தான், உபகாரம் பெறுவது எளிது; உரிமையைப் பெறுவது கடினம்.

— சி.என். அண்ணாதுரை —

FREE E- BOOKS , www.thamizham.net.,



# வண்ண கிளாஸ்களை முத்தமிட்டால்...



# எண்ணில் அடங்கா ஆபத்து உண்டு!

FREE E- BOOKS , www.thamizham.net.,

# கிரிக்கெட் வைத்தியம்

கவனம் செலுத்த வேண்டிய உயிர்ப் பிரச்சினையில் கவனம் செலுத்தாதபடி, கருத்துக் காட்டாதபடி வேறு பக்கம் திசை திருப்பி விடுவது, ஆளும் பிற்போக்கு அதிகார வர்க் கத்தின் திட்டமிட்ட நடவடிக்கையாகும். கவர்ச்சிகர சினிமா, 'நிர்வாண'ப் பத்திரிகைகள் என்ற வரிசையில் தற்போது விளையாட்டும் ஒன்றாக இந்தியாவில் இணைக்கப்பட்டிருக் கிறது. அதிலும் குறிப்பாகக் 'கிரிக்கெட்', கேடு கெட்ட சினிமாவை விட, அவிழ்ந்த கோலப் பத்திரிகைகளை விட, ஆபத்தானது.

ஒரு நாட்டில், அதுவும் படிப்பறிவு குறைவாக உள்ள இந்திய நாட்டில், படித்த, படிக்கும் கூட்டம் நாட்டின் விதை மணிகள் என்று நம்பப்படுகிறது. அந்த விதை மணிகளைப் பதராக்கும் முயற்சியில், கிரிக்கெட் கிரீடம் வகிக்கிறது. படிக்கிறவன், பணிபுரிகிறவன், அனைவரும், கிரிக்கெட் கமெண்டரி போதையில் நன்கு மூழ்க வைக்கப்படுகிறார்கள்.

அரசாங்கத் தொடர்புச் சாதனைகளான வானொலி, தொலைக்காட்சி, மற்றைய நிகழ்ச்சிகளை எல்லாம் ரத்து செய்துவிட்டு, இந்தியர்களின் உயிர்ப் பிரச்சினையான 'கிரிக்கெட்' கமெண்டரியை அல்லும் பகலுமாகத் தொடரு கின்றன.

விளையாடுவது வேறு; விளையாட்டை வேடிக்கை பார்ப்பது வேறு; பொழுது போக்காக இருப்பது தான் விளையாட்டு; தமிழ்நாட்டில் மாலையில் விளையாடுவது தான் மரபு. அலுவலகம், கல்லூரி இவற்றிற்கு விடுமுறை எடுத்துக் கொண்டு, விளையாட்டில் பங்கேற்க அல்ல, விளையாட்டை வேடிக்கை பார்க்க இந்திய ஏழை மக்களை ஊக்கப்படுத்துவது நல்லது தானா?

ஒரு வேளைச் சோற்றிற்கு நாயாக அலையும் தெருப் பொறுக்கி, பிழைக்கும் வழியைத் தேடுவது முக்கியமா?

FREE E- BOOKS , www.thamizham.net.,

எங்கோ எவனோ அடிக்கும் பந்துக்குச் சிந்து பாடுவது முக்கியமா? பந்துக்குச் சிந்து பாடினால், தன் பசிப் பிரச்சினையையும், அந்த பிரச்சினைக்குக் காரணமான பெருந்தனவான்களையும் மறந்திருப்பான் என்பது தானே நோக்கம்!

விளையாட்டிற்கென ஒவ்வொரு நாளும் ஒரு சில பக்கங்களை வீணடிக்கும், இந்நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகள், இந்நாட்டு பசியைப் போக்க விவசாயப் புதுமைகளைக் கண்டுபிடிக்கும் வேளாண்மை விஞ்ஞானிகளை விளம்பரப் படுத்தலாம் அல்லவா? புதிய நெல்லைக் கண்டு பிடித்தவர், புதிய கருவியைக் கண்டு பிடித்தவர், புதிய நூல்களை எழுதியவர் ஆகியோரை விட, விளையாட்டில் ஒரு சிலர் கிழித்தது தான் முக்கியமா?

சில கல்வி நிறுவனங்கள், கல்வியைப் பரப்பும் நோக்கத்தைக் கைவிட்டு விட்டு, விளையாட்டு வீரர்களை உற்பத்தி செய்வதில் அதிககவனம் செலுத்துகின்றன; கல்வியில் வல்லுநரை உருவாக்கக் கல்வி நிறுவனமா? கால் பந்தாட்ட சோமுவையும், கிரிக்கெட் மட்டை சாமுவையும் உற்பத்தி செய்யக் கல்வி நிறுவனமா? மாணவர்களுக்குச் செலவழிக்கப்படும் மக்கள் வரிப்பணத்தின் பெரும்பகுதியை, ஒரு சில பணக்கார வீட்டுப் பிள்ளைகள் மட்டும் பந்தாட்டம் ஆடக் கல்வி நிறுவனங்கள் செலவு செய்வது முறையா? ஏ மூடத் தமிழ்நாடே! உனக்கு 'முழிப்பே' வராதா?

— [illegible]


Sales Representative தேவை.

நல்ல சம்பளமும், கவர்ச்சிகரமான கமிஷனும் உண்டு. விற்பனைத் துறையில் மிகத் திறமையும், ஆர்வமும் உள்ள நபர்கள் மட்டும் 7-4-85 காலை 10—க்கு நேரில் வரவும்.

BHARATH MARKETING CORPORTION எண் : 1494, 13வது மெயின் ரோடு, (திருமங்கலம் அருகில்), அண்ணாநகர் மேற்கு, சென்னை — 40.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

(சுட்டி 48, 49 இதழ்களை விமர்சித்து எழுதிய வாசகர்கள் இவர்கள். தொடர்ந்து வாசகர்கள் விமர்சனங்களை எதிர்நோக்குகிறோம்)

வி.கே. பொன் கருப்பசாமி, வடக்கு சங்கரப்பேரி; ஆர்.கே. நாகா, கதிரணம்பட்டி; உ.ச. சிவன், சங்கரப்பேரி; ஆர். கனகதாரா, வளவனூர்; கே. ராமகிருஷ்ணன், அங்கமாலி; ம. வீரமுத்து, சிறுகண்பூர்; தா. சிந்து குமார், திருவட்டார்; எஸ். மணிராஜ், கல்லல்; கே. செந்தமிழ்ச் செல்வன், சென்னை — 11; செ. பழனி, செருக்கலை; எம். சம்பத், வேலாயுதம் பாளையம், எஸ்.வி.பி. வீரக்குமார், அகமலை; எஸ்.கே. இராசேந்திரன், நல்ல. குமரம்பாளையம்; ஊ. பரமசிவன், தேவிகுளம்; வ. சௌந்தரராஜன், திருச்சி; ஜி. நாகராஜன், சத்தியமங்கலம், இரா. செல்வகுமார், ஒட்டேரி.

---


## எந்த ஐயத்திற்கும் பதில் - 2 ரூபாயில்!

'யாரிடம் கேட்பேன்? எங்கு போய்த் தேடுவேன்?' என்று குழம்பித் தவிக்கும் நிலை இனி யாருக்கும் வேண்டாம். மனித அறிவுக்கு எட்டிய அத்தனை துறைகளுக்கும் சுட்டி பதிலளர் குழு நிபுணர்களைக் கொண்டு பதில் அளிக்க முயல்கிறது.

**இதுபோன்ற கேள்விகளா? அல்லது வேறு மாதிரியா? கேளுங்கள்**

✷ புதிதாக சிறுதொழில் தொடங்க யாரை எப்படி அணுகுவது என வழி காட்டுக

✷ "தனிச்சுற்றுக்கு மட்டும்" என்றுப் போட்டுப் பத்திரிகை நடத்துவது சட்டப்படி சரியா?

✷ 10 ஆண்டுகளாக குழந்தைப் பேறின்றி பரிதவிக்கும் எனக்கு விமோசனம் பிறக்குமா?

✷ வீட்டுக்காரன் வீட்டை காலி செய்யச் சொல்லி அநியாய வழிகளில் மிரட்டுகிறான். சட்டம் எனக்கு உதவுமா?

✷ உலகில் கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சி நடக்கும் நாடுகள் எத்தனை?

கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 விதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள். பதில்களைத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம் எழுதுக: சுட்டி பதிலளர் குழு, 1494 அண்ணாநகர், சென்னை-600040


FREE E- BOOKS , www.thamizham.net.,

**காது கேட்கச் செய்வது எமது பணி**

வெளியே தெரியாமல் அணிந்து கொள்ளக்கூடிய ஆர்பி (ARPHI) ஹியரிங் எய்டுகள் மூலம் உங்களுக்கு நன்றாகக் காது கேட்கச் செய்ய எங்களால் முடியும். எல்லாவித ஹியரிங் எய்டுகளுக்கும் நாங்கள் 'சர்வீஸ்' செய்து தருகிறோம். விற்பனையும், சர்வீஸூம் உத்திரவாதமானவை.

**இயர் எய்ட்ஸ்**

4, வடக்கு உஸ்மான் ரோடு,
கோடம்பாக்கம் ஹைரோடு ஜங்ஷன்
தி.நகர், சென்னை-600 017
போன்: 440361


"கணையாழி" பற்றிய அறிக்கை — 4வது பாரம் (8—வது விதிமுறைப்படி)

1. வெளியிடும் இடம்: 1494, அண்ணா நகர், சென்னை — 600 040.
2. வெளியிடும் காலம்: மாதமொரு முறை
3. அச்சிடுபவர்: ஜே.எஸ். கிட்ராஜ் ஷா, தேசிய இனம்: இந்தியர், முகவரி: 95, சாமி தெரு, சென்னை — 600 001.
4. வெளியிடுபவர்: கி. இராமச்சந்திரன், தேசிய இனம்: இந்தியர், முகவரி: 1494, அண்ணா நகர், சென்னை — 600 040.
5. ஆசிரியர்: கு. நாராயண பாரதி, தேசிய இனம்: இந்தியர், முகவரி: 1494, அண்ணா நகர், சென்னை — 600 040.
6. பத்திரிகையின் மொத்த முதலீட்டில் 1%க்கு மேல் பங்குடையோர், உரிமையுடையோர் பெயரும் முகவரியும்: 1. கே.எஸ். சுவாமி, ஜெயமுருகமார் அச்சகம், சென்னை — 600 053 2. டி.செல்வம் ராஜ் ஏபி 806 அண்ணா நகர், சென்னை — 600 040 3. திருமலைநகர், 1494, அண்ணா நகர், சென்னை — 600 040.

கி. இராமச்சந்திரன் ஆகிய நான் மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்தவரை உண்மை என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள்: 28.2.83

(ஒப்பம்) கி. இராமச்சந்திரன், வெளியீட்டாளர்


சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாகச் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ. 5/- உடன் உங்களுக்குச்செய்யவேண்டிய பணிகளின் விவரத்தினை தெரிவிக்க வேண்டிய முகவரி:—

**மைதிலி மோகன்,**
24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053





**சுட்டி 50வது இதழை வாழ்த்த நீயில்லை!**
ஆயினும் நீ வளர்த்த நிறுவனம் வாழ்த்துகிறது!

உழைப்பின் உயர்வால்
நேரிய செயலால்
மிக இளமையிலேயே
இவர் வெற்றியாக்கிய
நிறுவனம்:

**ரங்காடைப் ஃபௌண்டரி**

சென்னையில் எல்லாவித அச்சு எழுத்துக்கள், அச்சக உபகரணங்கள் வாங்க நம்பகமான இடம். தொடர்புக்கு:
73, ஹெண்டர்ஸ் சாலை, சேப்பேட், சென்னை-600 112.
போன்: 66 42 93, 37999


FREE E- BOOKS , www.thamizham.net.,

# தாஜ்மஹால் காலக் கவிதை

தாஜ்மகால் கட்டப்பட்டபோது, ஷாஜஹான் பொதுமக்களைத் கசக்கிப் பிழிந்து வரி வசூலித்தான். இதில் குமுறி வெடித்த அக்கால கவிஞன் ஒருவன் இப்படி ஒரு கவிதை எழுதியிருக்கிறான்:



ஷாஜஹான் தன் மனைவியைப்
பெருமைப் படுத்துவதற்காக
நாங்கள் எங்கள் மனைவியரைச்
சிறுமைப் படுத்துகிறோம்.

# கேட்க வேண்டிய கேள்வி

கவிஞர்கள் மக்கள் அபிமானம் பெற்ற பரபரப்பானவற்றைப் பாடும் அளவிற்கு மற்றவற்றைப் பாடத் தவறுகிறார்கள். ஈழத்துப் பிரச்சனையைப் பற்றி எழுதாத கவிஞர்கள் யார்? குட்டிமணியின் கண்கள் பிடுங்கிய கொடுமையைப் படம் பிடித்து எழுதிய பேனாக்கள், நம் தஞ்சை விவசாயிகள் சந்திரசேகர், சந்திர[illegible] இருவரும் திருபனந்தாள் மடத்து அடியாட்களால் — அன்பே சிவம் என்பவர்களால் கொடுமையான கண்களை பிடுங்கப்பட்ட நிகழ்வை ஏன் யாருமே பாடவில்லை? எழுதவில்லை! இப்படிக் கேட்கிறார் கவிஞர் இன்குலாப்!

FREE E- BOOKS , www.thamizham.net.,

# தூக்குமேடையில் தோழன் பகத்சிங்

(சென்ற மாதப் பக்கங்களில், "சித்தரஞ்சன் தாஸின் மனைவி வசந்தி தேவியார்" என்பது "மாணவி வசந்தி தேவியார்" எனத் தவறாக அச்சாகிவிட்டது. மன்னிக்கவும்)

அது — 1928 டிசம்பர் 17!

லாலா லஜபதி ராய் இறந்து போன அதே 17 ஆம் தேதி அடுத்த மாதத்தில்! லஜபதி ராயின் சாவிற்குக் காரணமாக இருந்த ஸ்காட் மற்றும் சாண்டர்ஸைத் தீர்த்துக் கட்டுவது என்ற முடிவை எடுத்திருந்தது, ஹிந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசுச் சங்கம்!

லாகூரில் உள்ள டி.ஏ.வி. கல்லூரிக்கு அருகில் ஒளிந்து நின்று கொண்டு, எதிரே உள்ள போலீஸ் ஸ்டேஷனைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள், இரண்டு இளைஞர்கள். அவர்கள் — பகத்சிங்கும், ராஜகுருவும். அந்த இரண்டு இளைஞர்களுக்கும் ஏதாவது ஆபத்து வருகிறதா என்பதை அவர்களுக்கே தெரியாமல் மறைவில் நின்று கவனித்துக் கொண்டிருந்தான், இன்னொரு இளைஞன்! அவன் — சந்திர சேகர ஆசாத்!

சாவு தனக்காய்க் காத்திருப்பதை அறிந்து கொள்ளாமல், சாண்டர்ஸ், மோட்டார்பைக்கில் வெளியே வந்தான். ஸ்காட்டை எதிர்நோக்கி நின்றவர்களுக்கு, சாண்டர்ஸ் கிடைத்தான். முதலில் சுட்டது ராஜகுரு! அவன் துப்பாக்கி, தன் குறியை எப்போதும் தப்ப விட்டதே இல்லை!


தொடர்ந்து தோட்டாக்களைச் செலவிட்டான் பகத்சிங்! சாண்டர்ஸைக் காப்பாற்ற வந்த இன்னொரு போலீஸ்காரனுக்கும், பகத்சிங்கின் துப்பாக்கி பரிசளித்தது.

பிறகு, இருவருமாய்த் தப்ப முயன்ற போது, பெஃன் என்னும் கான்ஸ்டபிள் அவர்களை விடாது விரட்டினான்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

அவன், மறைவில் நின்ற, ஆசாத்தின் தோட்டாவால் அடக்கம் செய்யப்பட்டான்.

பகத்சிங்கும், ராஜகுருவும், டி.ஏ.வி. கல்லூரிக் காம்பவுண்டிற்குள் ஏறிக் குதித்து... அப்புறம், காணாமல் போயினர்!




அடுத்த நாள் காலையில், சிவப்பு மை சுவரொட்டி ஊர் முழுவதும் தென்பட்டது. அதில்,

"லாலா லஜபதிராயின் மரணத்திற்கு பழிவாங்கப்பட்டு விட்டது...... சாண்டர்ஸை ஒழித்ததின் மூலம், ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்ட் ஒருவனை ஒழித்துக் கட்டியுள்ளோம். மனித ரத்தம் சிந்தப்படுவது, எங்களுக்கும் தாளாத துயரைத் தருகிறது. ஆனால், புரட்சியின் பலிபீடத்தில் ரத்தம் சிந்துவதை எப்படித் தவிர்க்க முடியும்?"


என்று கேட்டிருந்தனர்! ●●●●● — சுப. வீரபாண்டியன்

(இன்னும் வரும்)

## ஜெயகாந்தன் நூல்கள்

யுக தர்மம் (சிறுகதைத் தொகுப்பு) ரூ. 10/—
மருதமலையான் பதிப்பகம்,
27, முத்து முதலி தெரு, ராயப்பேட்டை, சென்னை — 14
பாவம் போக்கும் கங்கை (குறுநாவல் தொகுப்பு) ரூ. 12.75
திருமகள் நிலையம்,
55, வெங்கடநாராயணா சாலை, சென்னை — 17

FREE E- BOOKS , www.thamizham.net.,



# ராஜேஷ் குமார் நாவல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிவப்பு நிழல்கள் | 7.00 |
| 2. | இரண்டாவது உயிர் | 7.25 |
| 3. | இனிமேல் சாருமதி | 8.00 |
| 4. | உலராத ரத்தம் | 9.00 |
| 5. | யமுனாவின் 48 மணி நேரம் | 9.50 |
| 6. | இந்து சிரிக்கிறாள் | 10.00 |
| 7. | ஆபத்து இங்கே ஆரம்பம் | 10.00 |
| 8. | நில். கவனி. கொல்! | 10.00 |
| 9. | லேகா — என் லேகா | 11.00 |
| 10. | கொலைக்காரக் கம்ப்யூட்டர் | 13.00 |
| 11. | இரண்டாவது தாலி | 18.50 |
| 12. | கொல்ல கொல்ல இனிக்குதடா | அச்சில் |
| 13 | இனிமைக்கு இன்னொரு பெயர் அனிதா | அச்சில் |
| 14. | என் மனைவியின் கணவன் | அச்சில் |
| 15. | தப்பு தப்பாய் ஒரு கொலை | அச்சில் |



மயிலவன் பதிப்பகம்,
7, எம்.கே. அம்மன் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை — 600 004.

FREE E- BOOKS , www.thamizham.net.,

For Quality Offset Printing

RAVINDRAN PRESS

137, Dr. Natesan Road,
TRIPLICANE,
MADRAS-600 005.

S. M. RAVINDRAN
Proprietor.
Phone : 841712

FREE E- BOOKS , www.thamizham.net.,

சுட்டி மாத இதழுக்கு
எங்களது நல்வாழ்த்துக்கள்



தமிழோசை அச்சகம்
84, அபிபுல்லா சாலை
தியாகராய நகர்
சென்னை — 600 017

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சுட்டி அறம்




**இதுவரை எழுத்து வழி மட்டும் இலட்சியத் தொண்டு புரிந்து கொண்டிருந்த, சுட்டி, தன் தொண்டு விழுதுகளைக் கல்வி, சட்டம், மருத்துவம் என்ற விரிந்த பரப்புகளில் விரிவாக்க விரும்புகிறது.**

**குறிக்கோள் ஒன்று : சட்டத் தொண்டு**

அஞ்சல், போக்குவரத்து, மின்துறை, தொலைபேசி, நகர்த்துாய்மை முதலானவற்றில் அரசாங்கம் புரியும் ஒழுங்கீனங்களும், ஒரு சில தனியாரும், தனியார் அமைப்புகளும் இழைக்கும் அநீதிகளும் கேட்க நாதியில்லாமல் ஒரு வழிப் பாதைகளாக—தான் தோன்றித்தனமாக இயங்கி வருகின்றன. உறங்கும் மக்கள், உரிய உரிமைக் காகப் போராடவேதே இல்லை! குரல் கூட எழுப்புவது இல்லை. பொதுமக்களின் நலனைச் சேதப்படுத்தும் அரசு, தனியார் ஆதிக்கங்களின் மீது, பொதுமக்களின் சார்பில், பொதுப் பிரச்சினைக்காகச் 'சுட்டி அறம்' சொந்தச் செலவில் அறவழக்குத் தொடுக்க வழி செய்யும்

**குறிக்கோள் இரண்டு : கல்வித் தொண்டு**

விடுதலை பெற்று நாற்பது ஆண்டுகளாகியும், இந்தியக் கல்வித்துறை, நாட்டில் ஞான விழிப்பை ஏற்படுத்துவதற்குப் பதிலாக உறங்கும் குழந்தைகளையும், சிறங்கும் இளைஞர்களையும் பல கோடி செலவில் உருவாக்கியிருக்கிறது. கலைச்சாலை நிறுவனங்களாக இயங்க வேண்டிய கல்வி நிறுவனங்கள் கறுப்புச் சாவங்களால் வியாபார நிறுவனங்களாக மாற்றப்பட்டு விட்டன. இந்த வீழ்ச்சியிலிருந்து கல்வித்துறையை மீட்சி பெறச் செய்யும் முகமாக, முழுமும் தொண்டு நோக்கத்துடன் புதிய முறைப் பள்ளியைப் புதிய போக்கில் புதிய நோக்கில் உருவாக்கி நடத்துவது.

**குறிக்கோள் மூன்று : மருத்துவத் தொண்டு**

அரும்பெரும் இலட்சியங்களை, நோயில் மருந்து கொண்டிருக்கும் கூனல் சமுதாயத்தால் அடைய முடியாது. எனவே, இந்த மண்ணிற்கே உரிய எளிய இயற்கை மருத்துவ முறைகளும், யோகாசனப் பயிற்சிகளும், வளர் கடந்த ஆழ்நிலைத் தியான முறைகளும் எல்லாரையும் எளிய செலவில் அடையச் செய்வது.

**குறிக்கோள் நான்கு : செய்தித் தொண்டு**

சுதந்திரத்திற்குப் பிறகு, விதை நெல்லாக இருந்து வந்த இளைய படித்த சமுதாயத்தையும் தமிழ்ப் பத்திரிகைகள் - சமூகச் சாத்தான்களாக மாறிப், மாறி, சினிமா, அரசியல், விளையாட்டு எனத்தினை மாற்றி விட்டன. ஏழ்மை, வேலையின்மை, ஊழல் என்று தன்னைச் சுட்டிக் கொண்டிருக்கும் உயிர்ப் பிரச்சினைகளிலிருந்து, மடை மாற்றி, பாலுணர்வுக் கனவுகளில் மூழ்கி அறிய, நசிவு இலக்கியங்கள் பாதை சமைத்து விட்டன. இயலிருந்து நிலையிலிருந்து மீட்டு, பத்திரிகை ஊடகத்தை மீட்பது சமுதாய முதற்கடமை. எனவே பொழுது போக்கைக் கடைசி நோக்கமாகக் கூடக் கொண்டிராத, ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு எழுத்தும் கூட மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற அக்கறை கொண்டு எழுதப்பட்ட இலட்சிய எழுத்துப் பிரசுரங்களை அடக்கவிலையில் தொண்டு நோக்கில் வெளியிடுவது வெளியிட்டுக் கொண்டேயிருப்பது.


**உங்கள் உதவி :**

இந்த நாட்டைச் சுயநலக் கோட்டான்களிடமிருந்து மீட்டெடுப்பது, இலட்சியச் சமத்துவ சமதர்மச் சமூகத்தை அமைத்தே தீருவது, என்ற இலட்சியம் ஈடேறுவது உங்களுக்கும் உடன்பாடான நோக்கங்கள்தாம். எனவே என்னென்ன வழிகளில் எல்லாம், தங்கள் உதவ முடியுமோ அந்தந்த வழிகளில் உதவுக! உங்கள் உதவி பொருளாகவும் இருக்கலாம்! பொழுதாகவும் இருக்கலாம்!

இங்ஙன்
**சுட்டி அறங்காவலர் குழு**

---

'SUTTY ARAM'





ஆசிரியர்: கு. காராயண பாரதி. வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன்.
1494 - அண்ணா நகர், சென்னை-600040. அச்சிடுவோர்: ஜே.எஸ். ஜெராஜ்ஷா,
இதைா பிரிண்டர்ஸ், 96, சாமிதெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600002.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

கட்டு: மாத இதழ் I APRIL 1985 Regd. No. TN/MS(N)/317
Licenced to post without prepayment Licence No. TN/MS(N)WP .58

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

FREE E- BOOKS , www.thamizham.net.,